
www.padippakam.com

111




# ஒரு தியாகம் அகதிகள் ஆசாப்படுங்கள்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE , FRANCE

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

என்னுடைய பக்கங்கள்......

வணக்கம். நமது 3வது சந்திப்பு இது. யாருடைய மனத்தையும் புண்படுத்தும் நோக்கில் இக் குறுநாவல் எழுதப்படவில்லை. காயமடைந்திருப்பவர்களின் கட்டைத்தான் எல்லோரும் பார்த்துக் கொள்ளட்டும் என்று பிரித்துக் காட்டியிருக்கிறேன். நோயை மாற்றிக் கொள்ள விரும்புபவர்கள் சிகிச்சையின் நோவை பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

நமது தாய் நாட்டில்; நம்மில் எத்தனையோ மாற்றங்கள் அடிக்கடி நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. நிகழ வேண்டும். பிரதானம்-நல்லவை மட்டுமே. மாறி வரும் புதிய யுகத்தில் பழையவர்கள், பணத்தை வழிபடுபவர்கள் தமது வசதிகளுக்காக ஏற்படுத்திய மாசுக்கள் ஒட்டியிருப்பது அநாகரிகமாக, அநியாயமாக தெரியவில்லையா? சாதிக் கொடுமைகள் அருகி வருகின்றன என்று சொல்லலாமே தவிர அழிந்து வருகின்றன என்று சொல்ல முடியாது. ஏனென்றால் அதைப் புதிப்பிக்கவும், மறைந்து விடாமல் பாதுகாக்கவும் சில சுயநலவாதிகள் முயன்று வருவதுதான். தீண்டாமையை ஒழிப்போம், சாதி வேற்றுமையை அழிப்போம் என்றெல்லாம் பெரிதாக விளம்பரத் தீயை வளர்த்து அதில் எல்லோரும் குளிர் காய்ந்தார்களே தவிர ஆத்மார்த்தமாகவே முயற்சி செய்பவர்களை காண்பது அரிது. ஏன் இந்த நிலை? பழையனவற்றில் ஊறிப்போனவர்களின் காரணமில்லாத, காட்டுமிராண்டித்தனமான பிடிவாதமும், புதியவர்களின் ஊக்கமின்மையும், விருப்பமின்மையும் இதற்கு காரணங்களாகின்றன. புதுமையை, புரட்சியைப் பேசிக் கொள்ளும் இளையவர்களும் தமக்கென்று சந்தர்ப்பங்கள் வரும் போது நிறம் மாறுவதும் 'பழைய குருடி கதவை.....கதை போல். இந்த நிலை இப்படியே நீடித்துக்கொண்டு போக விடலாமா? கூடாது. இந்த நிலைமை பூரணமாகவே அகற்றப்படவேண்டும். யாரால்? இந்தக் கேள்வியே எழக் கூடாது. எல்லாவற்றிற்கும் நாம் மற்றவர்களை நம்பித்தானே நமக்கு இந்த நிலமை. அதனால் நாம் தான் முயற்சி செய்யவேண்டும். எங்களால் முடியும் என்று திடசங்கற்பம் செய்து கொள்ளவேண்டும்.

நமது தாய் நாட்டிலிருந்து முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையில் நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கிறோம். ஜேர்மனியர்களிடமிருந்து அற்ககோல், டிஸ்கோ, பெண் சுகம் ஆகியவற்றை மட்டுந்தான் பின்பற்றிக் கொள்ளவேண்டுமென்று கட்டாயம் எதுவும் இல்லை. நல்லவற்றையும் அவர்களிடமிருந்து படித்துக் கொள்ளலாம். இதில் தப்பேயில்லை.

தொடர்ந்தும் சந்திப்போம்.

-பார்த்திபன்
01.1987.

West Germany

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE , FRANCE



படிப்பகம்

www.padippakam.com

வித்தியாசப்படும்
வித்தியாசங்கள்
இவை
அத்திவாரமில்லா
கடலோர
மணல் வீடுகள்

# வித்தியாசப்படும் வித்தியாசங்கள்

## 1

அதிகாலை நேரம்.வழமை போல் சூரியன் கிழக்கே உதித்திருந்தது. வழமை போல் பறவைகள் சத்தமிட்டுப் பறந்தன.வழமை போல் காற்று வீசியது.ஏனைய காலைக்காட்சிகளும் வழமை போல்.

கடைகள் திறக்கப்பட்டுக்கொண்டிருந்தன.தேநீர்க்கடையொன்றின் சார்பாக சீர்காழி முருகனுக்கு முதல் வணக்கம் செலுத்திக்கொண்டிருந்தார். பஸ் வண்டிகள் தமக்கே உரிய சத்தத்துடன் புகையைக் கக்கியபடி போய்க்கொண்டிருந்தன. ஓட்டப்போட்டிக்குதயாராக மினி பஸ்கள் ஆரவாரித்துச் சென்றன. துவிச்சக்கரவண்டிகள் ஜாக்கிரதையாக பாதைக்குப் போகாமல் ஒதுங்கிச் சென்றன.

பழமையானாலும் பெருமையாக காட்சியளித்துக்கொண்டிருந்த யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி கட்டிடத்திலின்றும் காலை நேர அலுவல்கள் நடந்து கொண்டிருந்தன.

இரவு நேரத்தாதிமார்கள் ஆயாசத்துடன் செல்ல வேலையை ஆரம்பிக்கஇருப்பவர்கள் புதிய சிரிப்புடன் வருகை தந்து கொண்டிருந்தனர்.

நடக்க கூடிய நோயாளிகள் அங்குமிங்கும் நடந்து காலையை அனுபவித்துக் கொண்டிருந்தனர்.காலைக்கடன்கள் சத்தமாக கழிக்கப்பட்டுக்கொண்டிருந்தன.

கிருபைராசா ஒருகையில் தும்புக்கட்டை,விளக்குமாறுடனும் மறுகையில் வாளியுடனும் நடைபாதையில் வந்து கொண்டிருந்தான்.அவனைப் பற்றிய அவசரஅறிமுகம்.வயது40.நன்கு கறுத்த கட்டுமஸ்தான உடம்பு.மீசையுண்டு.தாடியுண்டு.நரைக்கவில்லை.தடித்த துணியிலான அரைக்காற்சட்டை போட்டிருந்தான்.அது முழங்கால் வரை வந்தது.மேலே 'ரீ' சேர்ட் போட்டிருந்தான்.அது முன்பு மஞ்சள் நிறமாக இருந்திருக்கலாம்.காலில் போட்டிருந்த செருப்பு ஒன்று ஊசியின் உதவியை நாடியிருந்தது.

பெரியாஸ்பத்திரியின் மலசலகூடங்கள்,நோயாளர் விடுதிகள் என்பனவற்றை சுத்தம் செய்வதே அவன் சொன்று தொட்டு செய்து வருகின்ற தொழில். மிகுதி விபரங்கள் பின்னர்.

14ம் என் விடுதி.

வாளியை வைத்துவிட்டு வெளி விறாந்தையை கூட்டி குப்பையை மூலைக்கு ஒதுக்கினான்.பிறகு விறாந்தையோடு ஒட்டி கீழாகப் போய்க்கொண்டிருந்த வாய்க்காலை சுத்தப்படுத்தி அதிலிருந்த குப்பையையும் சேகரித்தான்.



படிப்பகம்

www.padippakam.com

அவசரமாக கட்டிலிலிருந்து வந்த வயோதிபம் ஒன்று காறித்துப்பி விட்டு மீண்டும் கட்டிலை தஞ்சமடைந்தது. சுத்தப்படுத்தியமைக்கு நன்றி சாட்சி முத்திரை பதித்தது போல் துப்பிய இடம் வெயிலில் பளபளத்தது.

கிருபைராசா தொழில் ஆயுதங்களுடன் மலசல கூடத்துக்குள் நுழைந்தான். அது நடக்க முடியாதவர்களுக்கான விடுதியைச் சேர்ந்தது. அவர்களுக்கு உதவியாக நிற்பவர்கள் தம்மைப் பெரிய தொண்டர்களாகக் கணித்து மலசலத்தை எடுத்து வந்து மலசலகூடங்களினுள் பரவியிருந்தார்கள்.

தாங்கள் அதைப் பாவிப்பதில்லை என நினைத்தோ, அதை சுத்தப்படுத்துபவன் மனிதனாக இருக்க மாட்டான் என நினைத்தோ பொதுவாகவே எல்லோரும் இப்படிச் செய்ய பழகிக்கொண்டார்கள் அல்லது வழக்கப்படுத்திக் கொண்டார்கள்.

துப்பக் கூடாது என்ற இடத்தில் துப்பிவிட்டு போவபர்கள் எங்கள் மக்கள். இப்படிப்பட்ட பொது இடங்களை சுத்தமாக பேண நினைப்பார்களா? கதைக்கும் போது தயங்காமல் சொல்லி விடுவார்கள் -
"பெரியாஸ்பத்திரி சரியான குப்பை"

அந்த வைத்தியசாலை தங்களுக்காகத்தான். அதைப் பராமரிக்க வேண்டிய கடமை தனியே சம்பளத்திற்காக வேலை செய்பவர்களுக்கு மட்டுமல்ல தங்களுக்கும் இருக்கிறது என்பதை எவரும் உணர்ந்து கொள்வதில்லை.

கிருபைராசாவும் இந்த வேலை செய்யத் தொடங்கிய ஆரம்ப நாட்களில் அரியண்டப்பட்டவன்தான். அவனும் மனிதன்தானே. அருவருப்பினால் சாப்பிடாமல் கூட விட்டிருக்கிறான். சில நேரங்களில் இப்படி கண்மூடித்தனமாக அசுத்தப் படுத்துபவர்களை கொலை செய்தால் என்ன என்று கூட நினைத்திருக்கிறான். தங்களுக்கு பிழையாகத் தெரிபவர்களை எல்லாம் கொலை செய்ய வேண்டும் என்று எல்லோரும் புறப்பட்டால் கடைசியாக ஒருவருமே மிஞ்ச மாட்டார்கள். கொஞ்ச நாட்களிலேயே கிருபைராசாவுக்கு இதெல்லாம் பழகிப் போய் விட்டது. துப்பாக்கியோடு திரியும் அநேகமானோருக்கு உயிரின் மதிப்பு தெரியாதது போல்.

மின்சாரசாதனங்கள் நிறைந்துள்ள இடத்தில் எப்படி ஒருவன் எதிலும் முட்டி விடாமல் ஜாக்கிரதையாக உள்ளே போய் வருகின்றானோ அதே போல் கிருபைராசாவும் எச்சரிக்கையாக காலை வைக்க கூடிய இடங்களில் மட்டும் வைத்து சுத்தப்படுத்தக்கூடியளவு பரப்பை மட்டும் சுத்தப்படுத்தினான். வாளியில் தண்ணீரை எடுத்து வேகமாக அடித்து ஊற்றி 'ஒரு மாதிரியாக' தனது வேலையை முடித்துக் கொண்டான்.

வியர்வை வழிய அவன் வெளியே வந்ததும் அங்கு வந்த 'பெரிய' மனிதர் ஒருவர் வாசலில் நின்றபடியே 'ஒன்று'க்கு இருந்தார். "அவையளின்ரை வேலையைப் பார். குனிந்து நிமிர்ந்து வேலை செய்யப் பஞ்சி"



படிப்பகம்

www.padippakam.com

இப்படி அவர் வாய் சொல்லிக் கொண்டது. அவர் செய்யும் தவறுக்காக தானாகவே பாதை அமைத்து சிறுநீர் ஓடிக்கொண்டிருந்தது.

கிருபைராசா கொஞ்சமாக களைத்துப் போயிருந்தான். ஓய்வெடுக்க வேண்டும் போலிருந்தது. பீடி ஒன்றும் அவசியப் பட்டது, தொழிற் சாதனங்களை விருதியின் பின் பக்கமாக வைத்துவிட்டு விறாந்தைக்கு வந்தான்.

"அண்ணை, நெருப்பிருக்கே?"

பீடியைக் கட்டிலிருந்து பிரித்தபடி கேட்டான் கிருபைராசா. அவனுக்கு பக்கத்தில், முக்காலியில் சம்பந்தன் உட்கார்ந்து பத்திரிகை பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனுக்கு முன்னால் கையில் பொருட்களுடன் தமக்கு வேண்டியவர்களைப் பார்ப்பதற்காக பலர் காத்து நின்றனர். அவர்கள் எல்லோரினதும் அப்போதைய எதிரி சம்பந்தனே. அவன் என்ன செய்வான்? அவர்களைத் தடுத்து வைப்பதற்காகத்தானே அவனுக்கு சம்பளம் கொடுக்கிறார்கள்.

"இந்தா பிடி"

காற்சட்டைப் பையிலிருந்து நெருப்புப் பெட்டியை எடுத்துக் கொடுத்து விட்டு சம்பந்தன் மீண்டும் பத்திரிகையில் மூழ்கி விட்டான்.

ஒரு குச்சியை விளக்கி இரண்டாவதில் பீடியைப் பற்ற வைத்துக் கொண்டு நெருப்புப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்தான்.

"பேப்பரிலேயென்னண்ணை விசேசம்?"

"புதிசா என்ன வாறது? செல் வெடிச்சு பள்ளிக்கூடப் பெடியன் ஒருத்தன் செத்துப் போனான்."

"பாவம். வாழ வேண்டிய பெடியள் எல்லாம் அநியாயமா சாகிறாங்கள்" கிருபைராசா அவசமாக கறளை விழுங்கி பீடியின் ஆயுளுடன் தன்னுடைய ஆயுளையும் குறைத்துக் கொள்ள முயற்சி எடுத்துக் கொண்ட பின்

"வாறன் அண்ணை. கன இடம் கழுவ வேணும்" என்று சொல்லிக் கொண்டே போனான்.

இப்பொழுது அவனைப் பற்றிய மேலதிக விபரமொன்று. சம்பந்தன் கிருபைராசாவை விட வயதில் சிறியவன். அப்படியானால் ஏன் அவனை கிருபைராசா 'அண்ணை' மரியாதை போட்டு கதைக்க வேண்டும் என்று ஆச்சரியப் படாதீர்கள். கிருபைராசா சாதி குறைந்தவனும். அதனால் தான் இந்த வயது வித்தியாசம் பார்க்காத மரியாதை வித்தியாசம்.

சாதிகள் இல்லையடி என்று பாரதியார் பாப்பாவுக்கு மட்டும் தான் பாடி வைத்துள்ளாராம். 'பெரியவர்களுக்கு' இது சரிப்பட்டு வராதாம்?



படிப்பகம்

www.padippakam.com

விருதிக்குள் நுழைவதற்கு முன் பீடியை அணைத்து எறிந்து விட்டு வேலையை ஆரம்பித்தான் கிருபைராசா. ஆட்கள் நடமாட தொடங்கினால் வேலை செய்ய சிரமமாக இருக்கும் என்றபடியால் சுறுசுறுப்பாக அவன் இயங்கிக் கொண்டிருந்தான்.

"ஈழநாடு, ஈழமுரசு, உதயன், வீரகேசரி"

சிறுவன் ஒருவன் கையில் பத்திரிகைகளுடன் கத்திக் கொண்டு போனான். வெள்ளை ஆடை சகோதரிகள் அவசரமாகப் போய்க் கொண்டிருந்தனர். தூரத்தில் மருத்துவர் ஒருவர் பரிவாரங்களுடன் வந்து கொண்டிருந்தார்.

கிருபைராசாவுக்கு வேலை செய்து கொண்டிருக்கும் போதே வீட்டு ஞாபகம் வந்தது. மதிய போசனத்துக்கு இனித்தான் சாமான்கள் வாங்கிக் கொண்டு போக வேண்டும். அதுவும் இவன் தான் வாங்கியாக வேண்டும்.

காற்சட்டைப் பைக்குள் எவ்வளவு காசு இருக்கலாம் என்று மனக் கணக்கு பார்த்தான். இரண்டு மரக்கறி வாங்கப் போதும் போலிருந்தது.

கிருபைராசாவைப் பற்றிய இன்னும் சில விபரங்கள்:

திருமணமானவன். மனைவி பொன்னி பெரும்பாலும் சமையலறைதான் என்றாலும் ஏதாவது வீட்டு வேலைகள் சந்தித்தாலும் போய் செய்வாள்.

மகன் ரவி. பத்தொன்பது வயது ஆகிக் கொண்டிருக்கிறது. படித்துக் கொண்டிருந்தான். எப்படி என்றால் அது கிருபைராசா தம்பதிகளின் முழு முயற்சிதான். பசியை விட அவர்கள் படிப்பை மதித்தார்கள்.

வீடு என்று சொல்ல முடியாவிட்டாலும் குடியிருப்பதற்கு சொந்தமான இடம் இருந்தது. சொந்தக்காரர் என்று யாரும் இல்லை. தம்மால் முடிந்தளவிற்கு வாழ முயற்சி செய்து கொண்டிருந்தார்கள்.

நேரம் போய்க் கொண்டிருந்தது. பார்வையாளர் நேரத்துக்கான மணி அடித்தது. மணியின் ஓசை அடங்குவதற்கு முன்பாகவே எல்லோரும் உள்ளே புகுந்து விட்டார்கள். சிறிது நேரத்திலேயே அந்தக் கட்டடம் பாடசாலைக் கட்டடம் போல் மாறி விட்டது. ஒரே ஆரவாரம்.

நெருக்கமானவர்களைக் கண்ட மகிழ்ச்சி நோயாளர்களில் பளிச்சென்று தெரிந்தது.

ஒருவர் தனக்கு நடந்த அறுவைச் சிகிச்சையை சுவாரசியமாக விபரித்துக் கொண்டிருந்தார், மயக்க மருந்தினால் தான் மயங்கிய பின் நடந்தவற்றை பற்றி அவர் தத்ரூபமாக விளக்குவதை சுற்றி நின்றவர்கள் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தனர்.

தமது குடும்ப பிரச்சனைகளை இன்னொரு தம்பதியினர் மௌனமாக பகிர்ந்து கொண்டிருந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

சின்னப்பிள்ளையொன்று கட்டிலின் மீது ஏறி நின்று வேடிக்கை பார்த்தது.

கிருபைராசா வேலைகளை முடித்துக் கொண்டு பொருட்களை அதற்குரிய இடங்களில் வைத்து விட்டு நடந்து கொண்டிருந்தான்.

"கிருபைராசா நில்லடாப்பா"

ஆண்தாதி ஒருவர் அவனை நோக்கி வேகமாக வந்தார்.

"என்னங்கையா"

"ஓவசியரய்யா உன்னை ஒருக்கா உடனை தன்ரை றூமுக்கு வரட்டாம்"

என்ன விசயமாக இருக்கலாம் என்று தனக்குள்ளேயே யோசித்தவாறு தொடர்ந்து நடந்தான் கிருபைராசா.



படிப்பகம்

www.padippakam.com

அழிக்கப் படவேண்டிய
அரக்கன் ஆடும்
இன்னமும் வெல்லப் படாத
2 போர்க்களம்.

"திரும்பியும் பேச்சுவார்த்தையாம்"

"நடக்கட்டும்"

"பிறகும் எல்லாரையும் பேக்காட்டப் போறாங்கள்"

"பேக்காட்டட்டும்"

"என்னடா இன்றஸ்ற் இல்லாம கதைக்கிறாய்?"

"பின்ன என்னடா?இஞ்ச செல் தாக்குதல் நடக்கேக்க அங்க 'குளிர் கால மேகங்கள்'படம் ஒடுறது போல இங்க என்னடாஎன்டா சனங்கள் நாளுக்கு நாள் எப்பிடிஎப்பிடியெல்லாமோ சாகுதுகள்.அவையள் மூடின அறைக்குள்ள பாதுகாப்பா இருந்து கொண்டு அடுத்த பேச்சுவார்த்தைக்கு நாள் குறிக்க பேச்சு வார்த்தை நடத்துகினம்."

ரவியும்,சுகுமாரும் தான் கதைத்தபடி துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்தார்கள்.ஆசனத்தில் அமர்ந்து சாரத்தியம் செய்து கொண்டிருந்த ரவி தான் "திரும்பியும்....."என்று பேச்சை ஆரம்பித்தவன்."...நடத்துகினம்"என்று கடைசியாக முடித்த சுகுமார் குறுக்கு கம்பியில் அமர்ந்திருந்தான்.

ரவி கிருபைராசாவின் மகன்.சுகுமார் கல்லூரி அதிபர் ராமலிங்கத்தின் மகன்.எப்படி இருவரும் இப்படி ஒன்றாக பயணிக்கலாம் என்று நீங்கள் ஆச்சரியப் படலாம்.அதுதான் சுகுமாருக்கும் மற்றவர்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசம்.

ரவியும்,சுகுமாரும் ஒரே பாடசாலையில்,ஒரே வகுப்பில் படிக்கும் ஒரே வயது மாணவர்கள்.தோழர்கள். ரவி சுகுமாரிடம் மட்டும் தான் மனம் விட்டு பேசுவான்.சுகுமாருடன் நண்பர்களாவதற்கு ஏராளமானவர்கள் இருந்தாலும் ரவியுடனேயே அவன் நெருங்கிப் பழகினான்.

சுகுமார் அரசியலில் கொஞ்சம் கூடவாகவே ஈடுபாடு கொண்டிருந்தான். ரவி சுகுமாரின் அறையில் 'லெனின்,காஸ்ரோ,மார்க்கசிசம் இன்னும் பல



படிப்பகம்

www.padippakam.com

'சிசம்'பெயர் பெற்ற புத்தகங்களைக் கண்டிருக்கிறன். அவற்றை மேலோட்டமாகப் புரட்டிப் பார்த்துவிட்டு வைத்தாலும் சுகுமார் எப்படி இவ்வளவற்றையும் புரிந்து கொள்கிறன் என்று வியந்து கொள்வான்.

மீண்டும் தெரு. வெளியே துப்பாக்கிகளை நீட்டிக் கொண்டு வந்த 'டெனிக்காவுக்கு'வழியை விட்டு தோட்டத்துக்குள் சைக்கிளை இறக்கி மீண்டும் தெருவுக்கு கொண்டு வந்தான் ரவி. சுகுமார் ஏதோ முணுமுணுத்தான்.

"ஏன்டா உனக்கு பேச்சு வார்த்தையில நம்பிக்கையில்லையா?"

"பேசிற ஆட்களில தான் நம்பிக்கையில்லை"

"அப்ப ஆயுதந்தான் ஒரே வழியா?"

"அப்பிடியென்டு நான் சொல்லேலை. ரண்டு தரப்பிலயும் நம்பிக்கை போயிட்டுது. மனசில சந்தேகத்தை நிறைச்சுக் கொண்டு எந்த தீர்மானமும் எடுக்க முடியாது."

"எனக்கொன்றும் விளங்கேலை. சரியான வழி எதென்டும் தெரியேல. உயிர்கள் உட்பட எல்லாத்தையும் இழந்திட்டோம். இனியும் அரைகுறை தீர்வுக்கு உடன்பட்டு இழப்புகளைத் திரும்பியும் ஏற்படுத்திக் கொள்ள நாங்கள் தயாரில்லை."

"இப்பதான் நீ மக்களைப் பிரதிபலிக்கிறய்."

"மக்கள்?"

"நீதான்"

ரவிக்குச் சிரிப்புத்தான் வந்தது. சுகுமார் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

மினி பஸ் ஒன்று ஆட்கள் வழிந்தோட விரைந்து சென்றது. என்னதான் மாற்றங்கள் புதிதாக வந்தாலும் மனிதர்களை நெருக்கித் தலை குனிய வைக்கும் 'மினி பஸ்' மாற வேயில்லை.

துவிச்சக்கரவண்டி சுகுமாரின் வீட்டின் முன் தனது பயணத்தை முடித்துக் கொண்டது. அதை மதிலுடன் சாத்தி விட்டு இருவரும் வீட்டினுள் நுழைந்தனர்.

கதிரையில் வசதியாக அமர்ந்து எதையோ தைத்துக் கொண்டிருந்த தேவகி தலையை நிமிர்த்தி இருவரையும் ஒருமுறை பார்த்துவிட்டு மீண்டும்



படிப்பகம்

www.padippakam.com

தையல் வேலையில் மூழ்கி விட்டாள்.

தேவகி—சுகுமார், வாணியின் அம்மா. ராமலிங்கத்தின் மனைவி. ரவியுடன் சுகுமார் நெருங்கிப் பழகுவது அவளுக்குப் பிடிக்கவேயில்லை. சாடை மாடை—யாகவும், நேரிடையாகவும் எத்தனையோ முறை சுகுமாருக்கு அவள் எடுத்துக்—கூறியும் சுகுமார் செவி மடுக்காததோடு அவளுக்கே பல விளக்கங்கள் கூற தொடங்கி விடுவான்.

அவனுடன் பக்க பலமாக ராமலிங்கமும் நிற்பது தேவகியின் பலத்தை பலவீனமாக்கியது.

ராமலிங்கம் தொழிலில் மட்டும் கல்லூரி அதிபராக இருக்கவில்லை. வீட்டில், வெளியில் கூட தன்னுடைய தொழில் தகமைக்கேற்பவே நடந்து கொண்—டார். இதனால் வழமை போல் இப்படி பொது தொண்டு, நல்லது செய்யப்—போய் கிடைக்கும் சிறக்குப் பட்டத்தையும் வாங்கிக் கொண்டார்.

தேவகி காரணமில்லாமல் குறைப்படவில்லை. சுகுமாரின் தங்கை வாணியையே போதுமானதும், அடிப்படையானதுமான பிரச்சனையாகப் பிரகடனப்படுத்—தினள்.

வயது வந்த பெண் வீட்டிலிருக்கையில் வயசு வந்த ஆடவர்கள் அடி—க்கடி வீட்டிற்கு வருவது தேவையற்ற வதந்திகளைக் கிளப்பி விடும் என்ற ஒரு தாயாக அவள் பயந்தாலும் ரவியின் சாதித் தராதரம் தான் அவளை பன் மடங்கு பயமுறுத்தியது.

சமூகத்துக்காகஅவள் பயந்தாலும் சாதி வித்தியாசம் பார்ப்பதன் மூலம் அதே சமுகத்தில் ஒரு பங்கு எடுத்திருந்தாள்.

சமுகம், சமுகம் என்ற எல்லோரும் இல்லாத ஒன்றை உருவாக்கி விட்டு தம்மைத் தாமே புறம்பானவர்களாகக் கணித்துக் கொண்டு, மறைமுகமாகத் தாமே ஒரு அங்கத்தவராகவும் ஆகி விடுகிறார்கள். பல வர்ணங்கள் சேர்ந்து தானே வெள்ளை நிறத்தை உருவாக்குகின்றன.

அறைக்குள் நுழைந்தவுடன் ரவி கதிரையில் உட்கார்ந்து களைப்பை அகற்ற ஆரம்பித்தான்.

சுகுமார் தேநீர் போடுவதற்காக சமையலறைக்குள் போய் விட்டான். ரவி வந்தால் தேவகி தேநீர் போடவே மாட்டாள்.

ரவி அந்த அறையைச் சுற்றி கண்களை சுழல விட்டான்.



படிப்பகம்

www.padippakam.com

அந்த அறையிலிருந்த தளபாடங்களில் பெரும்பாலானவை புத்தகங்க-ளிலும், பிரசுரங்களிலும் நிரம்பியிருந்தன.

சுவரில் தந்தை செல்வா முதல் காந்தி உட்பட பல பிரபலமானவ-ர்கள் படமாகி இருந்தார்கள்.

ரவி எழுந்து போய் அலுமாரி ஒன்றைத் திறந்து புதிய புத்தகங்கள் ஏதாவது வந்திருக்கிறதா என்று பார்த்தான். 'தாய்" என்ற தடித்த புத்-தகமொன்றை வெளியில் எடுத்த போது பின்னால் மறைந்திருந்த பொருள் ஒன்று கண்ணில் பட்டது.

அதைக் கண்டதும் ரவி திடுக்கிட்டான். 'இது எப்படி சுகுமாரிடம் வந்தது?ஏன் இங்கே இருக்கிறது?"

ரவி புத்தகத்தை பழையபடி வைத்ததும் அந்தப் பொருள் மீண்டும் மறைக்கப் பட்டது. இதைப் பற்றி சுகுமாரிடம் கேட்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

"சுடுகுது. மேசையில வைக்கிறன்"

சுகுமார் நேர் நிறைந்த குவளைகளைக் கொண்டு வந்து மேசை மேல் வைத்தான். ரவி மீண்டும் கதிரையில் வந்து உட்கார்ந்தான்.

"இரவு கோயிலுக்குப் போவமா!? சுகுமார் கேட்டான்.

"நான் வரேல"

"நீ ஒண்டும் வந்து சுவாமி கும்பிட வேண்டாம். பெடியள் வருவாங்கள். அவங்களோட பம்பலா கதைக்கலாம்."

"ஊகும். நான் வரேல" ரவி மறுத்தான்.

"நீ ஒண்டும் பக்திமானு மாற வேண்டாம். சும்மா வாடா. நெடுக வீட்-டுக்குள்ள அடைஞ்சிருக்கவும் விசராயிருக்கு."

ரவி கொஞ்சம் யோசித்தான். பிறகு அரை மனதுடன் சொன்னான்.

"சரி, உனக்காண்டி வாறன்"

"இவர் பெரிய மனுசன். கூப்பிட்டா உடன வர மாட்டார்" சுகுமார் முணுமுணுத்தான்.



படிப்பகம்

www.padippakam.com

"சுகுமார் ஒருக்கா இங்க வா"

இப்போது குரல் கொடுத்தது உள்ளேயிருந்த தேவகி.

தேநீரை ஒரு தரம் உறிஞ்சி விட்டு உள்ளே போனான் சுகுமார்.

"என்னம்மா?"

"பின்னேரம் உனக்கிங்கை வேலையிருக்கு. வேற ஒரிடமும் போயிடாதை"

"என்ன வேலை?"

"வாணியை ஒருக்கா அவளின்ரை சிநேகிதி வீட்டை கூட்டிக் கொண்டு போய்ட்டு கூட்டிக் கொண்டு வர வேணும்."

"அவசரமில்லைத்தானே? நாளைக்கும் போகலாம்"

"இல்லை. கொப்பி ஏதோ வேண்ட வேணுமாம். கட்டாயம் கூட்டிக் கொண்டு போ."

"நான் அவனோட கதைக்கிறன்."

"நான் சொல்லுறன். நீ என்ன அவனோட கதைக்கிறது? சொன்ன பேச்சைக் கேட்டு நட. வீட்டு வேலை ஒண்டும் பாக்கேலாது. கண்டதுகளோட ஊரைச் சுத்த தெரியுமாக்கும்?"

தேவகிக்குக் கோபம் வந்திருந்தது. குரல் உயர்ந்திருந்தது.

சுகுமாருக்குப் புரிந்து விட்டது. இது அம்மாவின் திட்டமிட்ட சதி என்று. தானும் ரவியும் கதைத்தது அம்மாவுக்கு கேட்டிருக்கிறது. தன்னை ரவியுடன் போக விடாமல் பண்ணவே அம்மா சும்மா ஒரு வேலையைச் சொல்லி என்னைத் தடுக்கப் பார்க்கிறா. ரவிக்கு கேட்கட்டும் என்றுதான் பலமாக கதைக்கிறா.

சுகுமாருக்கு அவமானமாக இருந்தது. அம்மா இப்படி பழைய காலத்தவளாகவே இருக்கிறாளேயென்று கவலையாகவும் இருந்தது. ரவி என்ன நினைத்துக் கொள்வானோ என்று நினைக்கையில் கோபம் வந்தது.

"இண்டைக்கு எனக்கு நேரமில்லை. இரவு கோயிலுக்குப் போகப் போறேன். பிறகு ரவி வீட்டை சாப்பிட்டிட்டுத்தான் வருவேன்"



படிப்பகம்

www.padippakam.com

சுகுமார் எரியிற நெருப்பில் பட்டராகவே போட்டு விட்டுப் போய் விட்டான்.

"கொழுப்பைப் பார்.எல்லாம் கொப்பர் குடுக்கிற செல்லம்.வீட்டில பிள்ளையளை கண்டிச்சு வளக்கத் தெரியேல.பள்ளிக்கூடத்துக்குப் போய் பெரிசாய் என்ன கிழிக்கப் போறார்?"

தேவகியின் கோபம் சுகுமாரிலிருந்து ராமலிங்கத்தின் மேல் திசைமாறியிருந்தது. அவளுக்கு கோபம் வந்தால், யாரையாவது திட்ட வேண்டும் போலிருந்தால், அவள் பெரும்பாலும் தேர்ந்தெடுப்பது தன்னுடைய கணவனைத் தான்.ஏனென்றால் ராமலிங்கத்திற்கும் எதிரொலிப்புக்கும் சம்பந்தமேயில்லை.

சுகுமார் அறைக்குள் நுழைந்த போது ரவி கண்களைத் துடைத்துக் கொண்டதை அவதானித்துக் கொண்டான்.

"வாடா போவோம்"

சுகுமாரின் அழைப்புடன் ரவி எழுந்து கொண்டான். ரவிக்கு இப்படியான சந்தர்ப்பங்கள் பழக்கமானவை தான் என்றாலும் ஒவ்வொரு முறையும் கலங்கிப் போவான்.

இந்தக் கவலையில் சுகுமாரிடம் கேட்க வேண்டுமென்று நினைத்த கேள்வியை அவன் மறந்தே போனான்.



படிப்பகம்

www.padippakam.com

அகற்றப் பட வேண்டிய
குப்பைத் தொட்டி
உளுத்துப் போன சமுதாயத்தில்
3 ஊற்றெடுத்த சாக்கடை.

ஆடு ஒன்று கழுத்தில் தாலியுடன் புற்களைத் தேடிக் கொண்டிருந்தது. கோழி ஒன்று சாவகாசமாக சாம்பல் மேட்டில் படுத்திருந்தது. சற்றுத் தூரம் தள்ளி ஐந்து வாழைகள் பருத்து நின்றன.

கிருபைராசா தரையில் சப்பணமிட்டு அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். தட்டு இரண்டொரு இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் மட்டுமே நெளிந்திருந்தது.

கொஞ்சத் தூரம் தள்ளி பொன்னி உட்கார்ந்திருந்தாள். அலுப்புடன் போராடிய களைப்பு அவளில் அப்பட்டமாகத் தெரிந்தது.

"ரவுணுக்கை நடப்பு எப்பிடியனை?"

பொன்னிக்கு கிருபைராசாதான் பத்திரிகை, வானொலி எல்லாமே. புதினம் அறியக் கூடிய சந்தர்ப்பங்கள் அவளுக்கு மிகவும் குறைவு.

"புதிசா என்னத்தை? கடையள் திறந்திருக்கு. சனங்களும் பறவாயில்லை. பெடியளும் இவங்களோட திரியிறாங்கள்"

"ஆசுப்பத்திரிக்கும் ஆக்கள் வருகினமே?"

"வருகினமோவோ?" கிருபைராசா வாய்க்குள் கொண்டு போன சோற்றைத் திருப்பி தட்டில் வைத்து விட்டு கதைத்தான்.

"ஆக்கள் கூட வாற இடமெண்டா அது ஆசுப்பத்திரி தானே. இரத்தம் வழிய சனங்கள் வரேக்க எனக்கே அழுகை வரும்"

கொஞ்ச நேரம் இருவரும் ஒன்றும் கதைக்கவில்லை. கிருபைராசா தொடர்ந்து சாப்பிட ஆரம்பித்தான்.

"ரவி எங்க போட்டான்?"

"குமாரோட வெளியில போட்டான்"

"இண்டைக்கு இரவு நான் வரச் சுணங்கும்"



படிப்பகம்

www.padippakam.com

"ஏனணை? எங்க போகப் போறாய்?"

"ஓவசியர் ஐயா வீட்டை வரச் சொன்னவர். சின்ன வேலை ஒண்டிருக்காம். இண்டைக்குத்தான் செய்ய நேரம் கிடைச்சுது"

"ஆக பிந்தாம வந்திடு"

தட்டை வழித்து துடைத்து சாப்பிட்டு விட்டு, கழுவி வைத்து விட்டு போட்டிருந்த காற் சட்டையில் கையைத் துடைத்துக் கொண்டு வந்தான் கிருபைராசா.

"கொஞ்சம் வெளியால போட்டு அப்பிடியே போறன்"

"முழுக் காசுக்கும் குடிக்காதை."

பொன்னி சொல்வதைக் கேட்க கிருபைராசா அங்கில்லை.

கொஞ்ச நேரத்தின் பின் சுகுமாரும், ரவியும் வந்தார்கள்.

"அம்மா, அப்பா வரேலயோ?" ரவி கேட்டான்.

"வந்திட்டு இப்ப தான் வெளியால போகுது."

ரவியும், சுகுமாரும் சுவரோடு சாய்ந்தபடி தரையில் உட்கார்ந்தார்கள். தரை சுத்தமாக சாணியினால் மெழுகப் பட்டிருந்தது.

அந்த குடிசையில் வாசல் தவிர்ந்த ஏனைய இடங்கள் மண் சுவரினால் அடைக்கப் பட்டிருந்தன. சுவர்களுக்கும் கூரைக்கும் இடையே ஜன்னலின் சேவைக்காக இடைவெளிகள் விடப்பட்டிருந்தன. சமையலறை, படுக்கையறை எதுவும் அங்கே பிரிவினை கோரியிருக்கவில்லை.

பொன்னி கேத்தலில் தண்ணீர விட்டு அடுப்பில் வைத்தாள். வறண்ட ஓலைகளை அடுப்புக்குள் அனுப்பினாள். பின்னர் குனிந்து முகத்தை அடுப்பருகே கொண்டு போய் ஊதினாள். சிறிது தாமதித்துப் பின் நெருப்புப் பற்றியது.

"உன்னைக் கன நாளாவே ஒண்டு கேக்க வேணுமெண்டு நினைச்சனான்" சுகுமார் திரும்பி உட்கார்ந்து கதைத்தான்.

"என்னடா கேளன்"

"நீயேன் கோயிலுக்கு வர விரும்பிறதில்லை? கடவுள் நம்பிக்கையில்லையா?"



படிப்பகம்

www.padippakam.com

"கட்டாயம் மறுமொழி சொல்ல வேணுமோ?"

"விருப்பமில்லையென்டா சொல்ல வேண்டாம்"

ரவி தாமதித்து யோசித்தான். இவர்கள் கதைப்பதை அடுப்பருகே அமர்ந்து நெருப்புக்கு இடையிடையே உயிரூட்டிக் கொண்டிருந்த பொன்னியும் கேட்டுக் கொண்டிருந்தாள்.

முதல் முதல் ரவியுடன் சுகுமார் வந்த போது அவனும் தங்களுடைய இன சனம் தான் என்று பொன்னி நினைத்துக் கொண்டாள். ஆனால் ரவி சுகு-மாரை அறிமுகம் செய்து வைத்த போதுஅவளால் தன்னையே நம்ப முடிய-வில்லை. 'சீ இருக்காது. இவன் புலுடா விடுறான்' உண்மையை நம்பித் தானே ஆக வேண்டும். இந்தக் காலத்தில் இப்படி ஒரு பிள்ளையா என்று வியந்து போனாள்.

சுகுமார் மெல்ல மெல்ல அவர்களுடன் ஒன்றிக் கொண்டு வந்தான். தேநீர் குடிப்பதிலிருந்து வாயால் கேட்டு அவன் சாப்பிடும் போது பொன்னி உண்மையிலேயே உளம் சிலிர்த்துப் போனாள்.

இவர்களும் மனிதர்களே. எல்லா உணர்ச்சிகளும் இருக்கிறது. அப்படியி-ருந்தும் ஏன் இந்த சமூகம்- அதாவது இப்படி தம்மை அறிமுகப்'படுத்தும் மேல் மட்டம்-இவர்களை ஒதுக்கி வைக்கிறது? ஏன் தங்களுடன் சேர்த்துக் கொள்வதில்லை?

உண்மையிலேயே இந்த' சமூகம்' பைத்தியக்காரத்தனமானது. நாடாளும் தலைவனுக்கு கீழ் அடிமையாக இருக்கிறது. வேலைத் தளங்களில் எஜமானனுக்கு கை கட்டி சேவகம் புரிகிறது. தெருவில், வீட்டில் கூட ஒருவரை ஒருவர் அடி-மைப் படுத்தவே முயல்கிறது.

தங்களுக் குள்ளேயே ஏராளமான கீழ்த்தரங்களை வைத்திருக்கும் 'பெரிய'மனிதர்கள் சாதியைக் காரணங்காட்டி தாங்களாகவே தங்களை உயர்த்திக் கொண்டு விடுகின்றனர். வேடிக்கையாக இல்லை? சிலர் தம்மை தாமே மக்கள் தலைவனாக பிரகடனம் செய்வது போல்.

"கடவுள் நம்பிக்கை இருக்கு. ஆனா கோயிலைத்தான் எனக்கு பிடிக்கேல. கோயிலைக் குத்தகைக்கு எடுத்திருக்கிற மனுசரைத்தான் எனக்கு பிடிக்கேல. நாங்களெல்லாம் கோயிலுக்குள்ள போய் கும்பிட முடியாம பெரிய மனுசர் எல்லாரும் சேர்ந்து நின்று வேலி போட்டு வைச்சிருக்கினம். அங்க வந்து



படிப்பகம்

www.padippakam.com

இதையெல்லாம் பாத்துக் கொண்டு நிக்க நானும் அவையளைப் போல பக்திமானில்லை."

ரவியின் குரலில் ஆரம்பத்திலிருந்த கடுமை குறைந்திருந்தது. குறிப்பிட்ட இப்படியான விசயங்களை கதைக்கும் போது மட்டும் அவன் உணர்ச்சிவசப்பட்டு விடுவான்.

ஏன் ரவியிடம் போய் இதைக் கேட்டோம் என்று சுகுமார் கவலைப்படவில்லை. மாறாக ரவியின் மனதிலிருக்கும் சுமைகளை இறக்கி அவனுடைய துக்கங்களை பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளவே சுகுமார் விரும்பினான்.

பொன்னி பெரிய பேணியொன்றுக்குள் தேயிலையைப் போட்டாள். கொதித்துப் போய் சத்தம் போட்டுக் கொண்டிருந்த கேத்தலுக்கு அடுப்பு வெக்கையிலிருந்து விடுதலை கொடுத்து, நீரை இறக்கி தேயிலையைப் போடப்பட்டிருந்த பேணிக்குள் சுடுநீரை ஊற்றினாள்.

இரண்டு கண்ணாடிக் குவளைகளைக் கழுவியெடுத்து பணக்காரன் மடிபோல் தோற்றமளித்த வடிதட்டு மூலம் வடிகட்டிய தேநீரை அவற்றிற்குள் ஊற்றினாள். சீனியையும் போட்டு கலந்த பின் இரண்டையும் கொண்டு போய் அவர்களருகில் வைத்தான்.

"ஒ எல் ரெஸல்ட் தொடங்கப் போகுது. குளப்புவாங்களோ தெரியாது" ரவி சலித்துக் கொண்டான்.

ரவியும், சுகுமாரும் இதே வருடம் தான் உயர்தரப் பரீட்சை எழுதி முடித்து பாடசாலையிலிருந்து தற்காலிக விடுதலை பெற்றிருந்தார்கள்.

ரவி உண்மையிலேயே திறமையாகப் படிக்கக் கூடியவன். படிக்க வேண்டுமென்ற ஆர்வமே அவனது திறமைக்கு வழிகோலியது. எந்த விசயத்திலும் ஆசையும், ஆர்வமும் இருந்தால் மட்டுமே முன்னேற முடியும்.

உயர்தரப் பரீட்சைக்காக ரவி படித்ததைப் பார்த்து பொன்னி பயந்தே போனாள்.

"நெடுக கண்ணை முழிச்சுப் படிக்காதை ராசா. வருத்தம் வந்தா சோதினையும் எடுக்கேலாது."



படிப்பகம்

www.padippakam.com

ரவி தன்னுடைய படிக்கும் நேரத்தை வரையறுப்பதே அம்மாவுக்காக-தான். ஏனென்றால் அவன் படித்து முடிக்கும் வரை கண் விழித்திருந்து அவனுக்கு தேநீர் போட்டுக் கொடுத்துக் கொண்டேயிருப்பாள்.

கிருபைராசா நேரத்துக்கே படுத்து விடுவான். வேலை செய்த களைப்பு அவனுக்கு. அதற்காக மகன் மேல் அவனுக்கு அக்கறையில்லையென்று இல்லை. எப்போதும் ஆர்வமாக விசாரித்துக் கொள்வான்.

தனியார் நிறுவனத்துக்கு கூட ரவி போய் படிக்கவில்லை.

தங்களிடம் காசில்லையென்றுதான் அவன் தனியார் நிறுவனத்துக்கு போக-வில்லையோ என்ற சந்தேகமும் அவர்களுக்கிருந்தது.

"நீ போ ரவி. நான் என்ன பாடுபட்டென்றாலும் காசு தருவேன்." கிருபைராசா அவனை ஊக்கப் படுத்துவான்.

"ஓமடி. நீ ஒன்றும் யோசியாதை. படிப்புக்கெண்டா நாங்கள் எவ்வ-ளவும் கஸ்டப்படுவோம்" பொன்னி தைரியப்படுத்துவாள்.

அவர்களை சமாதானப்படுத்துவதற்குள் போதுமென்று ஆகி விட்டது ரவிக்கு.

"சுகுமார் நிறுசனுக்குப் போனன்தானே? அவன்ரை கொப்பியளை வாங்கிப் படிச்சாலே போதும். வீணாய் போய் அலைஞ்சு நேரத்தை ஏன் அநியாயமாக்குவான்? அங்கயெல்லாம் போய் வாற நேரத்துக்கு நான் இங்க படிச்சிடுவன்"

அவனுடைய காரணங்களை கிருபைராசா தம்பதிகள் அரை மனசுடனேயே ஏற்றுக் கொண்டனர். அந்தளவிற்கு படிப்பை அவர்கள் உயிராக மதித்தார்-கள். ஏனென்றால் அவர்கள் மிகவும் நொந்து போயிருந்தார்கள். ஒதுக்கி வைக்கும் கேடு கெட்டவர்களினால் அடிபட்டுப் போயிருந்தார்கள்.

தம்மிடமில்லாதது—படிப்பு—ரவியிடம் இருப்பதைக் கண்டு சந்தோ-சப்பட்டார்கள். கல்வியின் உதவியுடன் அவன் எப்படியும் இந்த சகதியிலிருந்து தப்பித்துப் போய் விடுவானென்று நம்பினார்கள். விரும்பினார்கள். இதற்காகவே இரவும் பகலும் அயராது பாடுபட்டார்கள். ரவியும் அவர்களை ஏமாற்றவில்லை



படிப்பகம்

www.padippakam.com

அவன் படிப்பதற்காக கிருபைராசாவும், பொன்னியும் ஒரு விதத்தில் கஷ்டப்பட்டார்கள் என்றால் தான் படிப்பதற்காக ரவி வேறு விதத்தில் சிரமப்பட்டான்.

பாடசாலையில்தான் அவனுடைய மனதை நோகடித்த சம்பவங்கள் அதிகம் சம்பவித்திருந்தன. சில சமயங்களில் படிக்கத்தான் வேண்டுமா என்ற சலிப்புக் கூட வரும். ஆனாலும் படித்தேயாக வேண்டும், கேலி செய்பவர்களின் முன்னால் தலை நிமிர்ந்து நடக்க வேண்டும் என்ற வெறி, உத்வேகம் அவனுக்கு வரும் சலிப்பைத் துரத்தியடித்தது.

வகுப்பில் முதல் முதல் பிரவேசிக்கையில் இவனைக் காட்டி மாணவர்கள் தமக்குள் ஏதோ கதைத்துக் கொண்டனர். தன்னைப் பற்றிய அறிமுகந்தான் பரவலாக்கப் படுகிறது என்பதையறிந்து ரவி குன்றிப் போனான். அழுகை கூட வந்தது.

கடைசி வரிசையில் இவனுக்கு இடம் ஒதுக்கப் பட்டது. எவரும் இவ-னுடன் அதிகமாக சேர்ந்து கொள்வதில்லை.

தீண்டாமையின் கொடுமைகளை உருக்கமாக விபரிக்கும் ஆசிரியர்கள் கூட இதைக் கண்டு கொள்வதில்லை. படிப்பித்தலுக்கு மட்டும் தானே அவர்-களுக்கு சம்பளம் கொடுக்கப் படுகிறது. புதுமையாக, புரட்சியாக எதை-யாவது செய்யச் சொல்லி அவர்களுக்கு யாரும் உத்தரவு போடவும் இல்லை. சான்றுகள் தருவதாக சொல்லவும் இல்லை.

இந்த நேரத்தில்தான் சுகுமார் கிட்ட வந்தான். ரவிக்குப் பக்கத்தி-லேயே தனது இருக்கையை மாற்றினான். அதிகமாகப் பழகினான்.

ரவி முதலில் கூச்சமடைந்தாலும் நாளடைவில் மனம் விட்டுப் பழகினான். கொந்தளிக்கும் நீர்த் தேக்கத்திற்கு நிச்சயம் ஒரு வடிகால் தேவை.

ரவிக்குச் சுகுமார் ஒருவனின் துணையே போதுமானதாக இருந்தது. ஆனாலும் நேரடியாக சிலரின் ஏளனங்களை, புறக்கணிப்புகளை சந்திக்கும் போது துக்கம் பொங்குவதை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை.

வாடா, போடா வரை ரவியும், சுகுமாரும் நெருங்கினார்கள். ஒருவர் வீட்டிற்கு மற்றவர்கள் போய் வருமளவிற்கு ஒன்றித்தார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

நேற்றிரவு கூட ரவியுடன் தான் சுகுமார் சாப்பிட்டான். தன்னால் தாயும் மகளும் விரோதப் படுவதை ரவி விரும்பவில்லை.

"கோயில் நெருக இருக்குந்தானே? நீ வீட்டு அலுவலை முதல் கவனி"

"கத்தாம வாடா" சுகுமார் அவன் சொன்னதை கவனிக்கவேயில்லை.

"தேத்தண்ணிக்கு சீனி காணுதம்மா. கொஞ்சம் கூடப் போடுங்கோவன். எங்களுக்குத் தானே பூச்சி வைக்கும்."

சுகுமார் உரிமையுடன் 'அம்மா' என்று விளிக்கும் போது பொன்னிக்கு கண்ணீரே வந்து விட்டது. ஆடு, மாடுகளைக் கூப்பிடுவது போல் கேட்டு கேட்டு பழகிப் போன அந்த தாயுள்ளத்துக்கு சுகுமாரின் வார்த்தைகள் இதமான ஒத்தடம் கொடுத்தன.

சீனிப் பேணியையும், கரண்டியையும் கொண்டு வந்து அவர்களருகில் வைத்தாள். சுகுமார் தேவையானளவு போட்டுக் கலக்கினான். இனிப்பை நாடி வந்து மோசம் போன எறும்பைக் கரண்டியால் தேநீரிலிருந்து அகற்றினான்.

"ரவி சீனி வேணுமென்டா வெட்கப்படாம போட்டுக் குடி"

சுகுமார் தேநீரை உறிஞ்சிக் குடித்த படியே சொன்னான்.

"பொன்னி, பொன்னி"

குடிசை வாசலில் நின்று யாரோ கூப்பிட்டார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

கண்ணை மூடி எழுதப்பட்ட
எல்லைக் கோடுகள்
சிந்தனைத் தீயால்
எரிக்கப் படவேண்டிய
தொல்லைக் காடுகள்.

## 4

பொழுது பட்டுக் கொண்டிருந்தது. வானம் செந்நிறமாகி, கருமையாவதற்கு தயாராகிக் கொண்டிருந்தது. பகல் முழுவதும் அலுவலாக வெளியே போயிருந்த பறவைகள் கொஞ்சம் கொஞ்சமாக வீடு திரும்பிக் கொண்டிருந்தன.

ஊருக்கு ஒதுக்குப் புறமாக அந்தக் கொட்டிலிருந்தது. சிறிய வாசல் விட்டு ஏனைய இடங்களை வேலி மறைத்திருந்தது.

கரையில் இரண்டொரு காகங்கள் கரைந்து கொண்டேயிருந்தன.

கிருபைராசா திண்ணையில் குந்தியிருந்தான். அந்த இடத்தில் எல்லோரும் அப்படித்தான் இருந்தார்கள். அங்கு அப்படி இருப்பதுதான் வசதியானது.

கிருபைராசாவுக்குப் பக்கத்தில் ஒவசியர் முருகேசு அமர்ந்திருந்தார். எப்படி? ஏன் இந்த இடத்தில் மட்டும் இப்படி? அதுதான் மற்றைய இடங்களுக்கும் இந்த இடத்துக்கும் உள்ள வித்தியாசம்.

"உவன் எங்க? மரத்திலேயே நித்திரையாப் போனனோ?"

"வாற நேரம் தான்."

"ஏன் சுணக்கம் என்டு தெரியேல?"

அங்கு இருந்தவர்கள் தங்களுடைய பொறுமையின்மையை வெளிப்படுத்தினர். வேலையை முடித்துக் கொண்டு நேராக வந்தவர்கள், வேலைக்கு போக தயாரானவர்கள், வீட்டில் கோபித்துக் கொண்டவர்கள், உயிர்சத்து தேவைப் பட்டவர்கள், பிஞ்சிலே பழுத்தவர்கள் என்று பல தரப் பட்டவர்கள் அங்கு கூடியிருந்தார்கள்.

சமரசம் உலாவும் இடம் என்று யாரோ—சீர்காழியா?—எதைபோ



படிப்பகம்

www.padippakam.com




வெளியீடு : 2

படிப்பகம்

www.padippakam.com

பாடியிருக்கிறார்கள். அவர்கள் உண்மையிலேயே அனுபவமில்லாதவர்களாகத்தான் இருக்க வேண்டும்(?). இல்லாவிட்டால் ஊருக்கு ஊர் இருக்கும் இப்படி ஒரு இடத்தை விட்டு வேறு இடத்தை தேடியிருப்பார்களா?.

பணக்காரன்-ஏழை, வேலை செய்பவன்-வேலை இல்லாதவன், சாதி கூடியவன்-சாதி குறைந்தவன், பெரியவன்-சிறியவன் இப்படி எல்லோரும் சமமாக ஒரே மாதிரி, ஒரே விசயத்துக்காக, ஒரே இடத்தில் கூடியிருப்பதை வேறெங்காவது பார்க்க முடியுமா?

"வந்திட்டான், வந்திட்டான்"

யாரோ குரல் கொடுத்தார்கள்.

"கோவிக்காதையுங்கோ. சைக்கிள் காத்துப் போட்டுது. அதுதான் சுணக்கம்"

சரவணன் மிதிச்சக்கர வண்டியை கவனமாக மரத்துடன் சாத்தி விட்டு கைபிடிகளில் கொழுவியிருந்த முட்டிகளைக் கொண்டு போய் கொட்டிலுக்குள் வைத்தான்.

திரும்பவும் வந்து 'கரியரில்' கட்டியிருந்த 'பரலை' விடுவித்து சிரமத்துடன் தூக்கிக் கொண்டு போய் அதையும் கொட்டிலுக்குள் வைத்தான்.

"கெதியா வாரடாப்பா" ஒருவர் அவசரப் பட்டார்.

சரவணன் நிதானமாக 'கிளாஸ்'களைக் கொண்டு வந்து கையளித்தான். 'பிளா' விரும்பிகள் தாமாகவே கரையில் செருகியிருந்தவற்றை எடுத்துக் கொண்டார்கள். அநேகமானோர் இயற்கையையே விரும்பினார்கள்.

சரவணன் முட்டியுடன் தர்பாருக்கு வந்தான். இப்போது அந்த இடத்தில் அவன்தான் ராஜா. அவன் வார்க்கப் போகும் கள்ளுக்காக அவனது காலடியில் எல்லோரும் தவம் இருந்தார்கள்.

சரவணன் இந்த இடத்தை விட்டு வெளியேறி விட்டாலோ அவனுக்கு கிடைக்கும் மரியாதையே வேறு

இப்படி ஏன் வித்தியாசங்கள்? இவை யாரால் உருவாகின்றன? என்ன காரணங்கள்?

இவற்றை யாரும் சிந்தித்துப் பார்க்க முயலவில்லை. இந்த விசயத்தில் தான் பாதிக்கப் படுவோருக்கும் மற்றையவர்களுக்கும் அதிக வித்தியாசம்



படிப்பகம்

www.padippakam.com

இருக்கவில்லை.

"இப்பிடியே வீட்டை வாறியோ இல்லாட்டி சுணங்குமோ?" முருகேசு தரையை ஊதியபடி கேட்டார்.

"நேர வாறன். கெதியா அலுவலை முடிச்சா நல்லது. நேரத்துக்கு வீட்ட வந்திடலாம்" பிளாவைக் கையில் பிடித்தபடி கிருபைராசா பதில் அளித்தான்.

நேரம் போகப் போக அங்கிருந்தவர்களின் நிலைப்பாடும் மாறிக் கொண்டிருந்தது.

குடும்ப ரகசியங்கள் வெளியே பாய்ந்து வந்தன. பழைய பகைகளுக்கு உரம் போடப்பட்டன. அரசியல் தாராளமாகப் பரிமாறப் பட்டது. ஏனைய இடங்களில் தான் கருத்து சுதந்திரம் ஒளித்துக் கொள்ள வேண்டியிருக்கிறதே?

"இன்டைக்கு கொறிக்க ஒன்டும் இல்லையோ?"

ஒருவன் மூலமாக உள்ளே போன கள்ளு தன்னுடைய விருப்பத்தை வெளி-யிட்டது.

"கொஞ்சம் பொறுங்கோ. பெடியன் இப்ப கொண்டு வந்திடுவான்"

சரவணன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே 'சின்ன சரவணன்' ஒரு பொதியுடன் உள்ளே வந்தான்.

உடம்பில் அளவு வித்தியாசங்கள் மட்டுமே தகப்பனுக்கும் மகனுக்கும் இடையில் இருந்தன. திறந்த மார்பு. மண்நிறத்தில் மடித்துக் கட்டிய சாரம். உள்ளேயிருந்து காற்சட்டை எட்டிப் பார்த்தது. கழுத்தில் நார் வளையம். உடம்பில் அங்காங்கே பனையின் அன்பளிப்புகள் ஒட்டியிருந்தன.

இந்த விசயத்தில் தான் சரவணன் போன்றவர்களில் பெரும்பாலான-வர்கள் பெரும் தவறிழைத்து விடுகிறார்கள். எந்தத் தொழிலால் அல்லது எதனைச் செய்வதால் அவர்கள் இந்த சமுதாயத்திலிருந்து தாழ்த்தப்படுகி-றார்களோ அதே தொழிலையே செய்யதமது வாரிசுகளுக்கும் பழக்கி விடு-கிறார்கள். கட்டடளையிட்டு விடுகிறார்கள்.

தாங்களாகவே ஒரு வட்டத்தைப் போட்டுக் கொண்டு அதற்குள் தாங்-களாகவே ஒரு உலகத்தை அமைத்துக் கொண்டு விடுகிறார்கள். ஏன்?

தாழ்வு மனப்பான்மையா? அப்படியானால் அது இவர்களின் தவறுதான்.



படிப்பகம்

www.padippakam.com

ஏனென்றால் தாழ்வு மனப்பான்மை அகற்ற முடியாத ஒன்றல்ல. அது ஒவ்வொருவரும் தாங்களாகவே உருவாக்கிக் கொள்வது. இதனாலேயே பாதிப்பை ஏற்படுத்தும், பாகுபாட்டை ஏற் படுத்தும் வித்தியாசங்களுக்கு இவர்களும் காரணிகளே.

அறியாமைதான் இந்த நிலைக்கு காரணமென்றால் அத்தியாவசியமானது கல்வி. என்ன கஷ்டங்கள் வந்தாலும், எவ்வளவு அவமானங்கள் இடைப்பட்டாலும் மனம் தளராது பாதிப்புக்குள்ளான பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டும். வேறு வேறு துறைகளில் பயில, அவற்றில் முன்னேறுவதற்கு ஊக்கமளிக்க வேண்டும். வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

தமது பிள்ளைகளின் வளமான எதிர்காலத்தை விரும்பும் உண்மையான பெற்றோர்கள் கட்டாயமாக இந்த விதமாகத்தான் நடந்து கொள்ள வேண்டும். தமது வசதிகளுக்காக தமது பிள்ளைகளையும் தங்களைப் போலவே அமைத்துக் கொண்டு விடும் பெற்றோர்கள் இருக்கும் வரையில் மனிதர்களால் உண்டாக்கப் பட்ட வித்தியாசங்களுக்கு அழிவு ஏற்படப் போவதில்லை.

இப்படியானவர்களின் பிள்ளைகள் மட்டும் வாளாதிருக்கலாமா? அவர்களும் சிந்திக்க கூடாதா? தமது பிற் கால நலனை திட்டமிட்டுக் கொள்வதில் அவர்களுக்கும் பங்கில்லையா?

என்ன காரணத்தினால் தம்மைச் சேர்ந்தவர்கள் ஆறறிவு மிருகங்களினால் ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டு அதிலிருந்து விலக முயற்சி எடுத்துக் கொள்ளக் கூடாதா? இரக்கமற்ற சமுதாயம் தாங்கள் இழிவாக கருதும் வேலைகளைத் தாங்களாகவே செய்து பார்த்துக் கொள்ள சந்தர்ப்பம் வழங்கக் கூடாதா?

வசதியில்லையே என்பதை மட்டும் பூதாகரமாக்கிப் பார்க்காமல் வாழ்ந்து காட்ட வேண்டும், நகையாடுபவர்களுக்கு முன்னால் தலை நிமிர்ந்து நடந்து காட்ட வேண்டும் என்ற வைராக்கியத்தோடு முன்னேறுவதற்கு முழு முயற்சியும் எடுத்துக் கொள்ள வேண்டும். எதிர்ப்படும் இடையூறுகளை தைரியமாக கடந்து செல்ல வேண்டும்.

"அன்னை அதொரு காலம். கழுத்தில சங்கிலி கூடப் போட்டுக் கொண்டு திரிஞ்சனான். இப்ப பாருங்கோ என்ர குடும்பத்துக்கு சாப்பாடு போடவே மற்றவையின்ரை கையை பாக்க வேண்டியிருக்கு."

கமக்காரர் ஒருவர் தன் குறையைச் சொல்லி அழுதார்.

"என்னண்ணை, ஆசுப்பத்திரியிலை மருந்தொண்டும் இல்லையாம்?"



படிப்பகம்

www.padippakam.com

ஒருவர் முருகேசுவின் வாயைக் கிண்டினர்.

"இன்னும் கொஞ்சம் விடடாப்பா." சரவணனிடம் சொல்லி விட்டு கதை கொடுத்தவரின் பக்கம் வசதியாக திரும்பி உட்கார்ந்தார் முருகேசு.

"அதை ஏன்ராப்பா கேட்கிறாய்?முந்திச் சனங்கள் என்னடா என்டால் நாங்கள் ஆசுப்பத்திரியில இருந்து மருந்துகளை எடுத்துக் கொண்டு போய் கடையளுக்கு விக்கிறனுங்கள் என்டு கதைக்குறாங்கள்.இப்ப உண்மையாவே மருந்துகள் இல்லாமப் போச்சு.உனக்குச் சொன்ன என்ன?ரத்தம் கூட போதுமானளவு சேமிப்பில இல்லை.அவசர அந்தரத்துக்கு நாங்கள்தான் ரத்தம் குடுக்கிறனுங்கள். தெரியுமே?"

முருகேசு உணர்ச்சி வசப் பட்டிருந்தார்.சிலர் ஆர்வமாக இவர்களுடைய உரையாடலை அவதானித்துக் கொண்டிருந்தனர்.

"அண்ணை தெரியாமத்தான் கேக்கிறன்.இஞ்ச மருந்துகள் இல்லையென்டு வெளி நாடுகளிட்டை உதவி கேட்டா அவங்கள் உதவி செய்ய மாட்டாங்களோ?"

கேள்வி கேட்டவர் தான் புத்திசாலித்தனமானதொரு கேள்வியைக் கேட்டதாக நினைத்துக் கொண்டு சுற்றிலும் ஒருமுறை எல்லோரையும் பார்த்துக் கொண்டார்.

"நீ இதில இருந்து கொண்டு சுகமாய் சேட்டுப் போட்டாய்.உனக்கு உலக நடப்புகள் எங்க விளங்கப் போகுது?பச்சையா நடக்கிற கொலையளையே வெளி நாடுகள் பாத்துக் கொண்டு சும்மா இருக்குதுகள்.பத்தாததற்கு அரசாங்கத்துக்கு ஆயுதங்கள் வேற குடுத்து உச்சாகப் படுத்தியினம்.பிறகு எப்பிடி அவையிட்டை இருந்து உதவி எதிர்பார்க்கலாம்?"

இப்போது கதைத்தது முருகேசு அல்ல.

"சுருக்கமாய் சொல்லப் போனா ஒலிம்பிக் விளையாட்டுகளை பாக்கிறமாதிரித்தான் எங்கட பிரச்சனையளையும் உலக நாடுகள் வேடிக்கை பாக்குது." இது முருகேசு.

"இதுக்குள்ள இவங்கள் என்னடா என்டால்......."

"என்னடா முணுமுணுக்கிறாய்?விளங்கச் சொல்லன்?"

"ஒன்டுமில்லை.கன்னுக்க பூச்சிதான் கூட என்டு சொன்னனான்"



படிப்பகம்

www.padippakam.com

சில வார்த்தைகளை விழுங்கியாக வேண்டிய சூழ்நிலைதான் தற்போது. ஏனென்றால் அவன் உயிர் வாழ வேண்டுமல்லவா?என்ன செய்வது?எதையெதைத்-தான் சமாளிப்பது?.

"முந்தியெல்லாம் உடலுறுப்புகளை வெளிநாடுகளுக்கு தானம் செய்யிற-தில பெயர் போனது எங்கட நாடு.இப்ப,எங்கட மூலவளங்களை எங்கட நாட்டிலதான் பயன் படுத்த வேணும் என்ட கொள்கைப்படி ஒவ்வொரு நாளும் மனித உடம்புகளாத் தாட்டு மண்ணை உரமாக்கிக் கொண்டு வாறம்"

இப்போது கதைத்தவனுக்கு தாடி வளர ஆரம்பித்திருந்தது.

"தயவு செய்து அரசியலைக் கதைக்காதையுங்கோ.கொஞ்ச நேர-மாவது நிம்மதியாயிருப்போம் "

இந்த சத்தத்தை அடுத்து அங்கு வேறு கதைகள் ஆரம்பமாயின.

இருள் வானத்தில் ஊறிக் கொண்டிருந்தது.நட்சத்திரங்கள் இன்னும் விளக்குப் போடவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

மானிடப் பிறப்பு
தங்கப் பதுமையில்
கரித் துண்டால்
ஒட்டப்பட்ட
கண் இமைகள்.

## 5

கிருபைராசா கொஞ்சம் கூடவாகவே குடித்திருந்தாலும் நிதானத்தை சிறிதளவேனும் இழக்கவில்லை. அவன் நிறைய குடித்ததற்கும் சரியான காரணம் வைத்திருந்தான். அவன் செய்யப் போகும் வேலை அப்படி.

முருகேசு குடும்பத்தின் அல்லது அந்த வீட்டில் குடியிருந்தவர்களின் எச்சங்களால் அந்த வீட்டின் மலசலக் கிடங்கு நிறைந்து இனி மேலும் முடியாது என்று எச்சரிக்கை செய்தது. அதை இடம் மாற்றத்தான் கிருபைராசாவின் உதவியை முருகேசு நாடியிருந்தார்.

கிருபைராசா தனது தோழர்களுடன் வந்து ஒரு கிழமைக்கு முன்பே புதிய கிடங்கு வெட்டி தயாராக வைத்திருந்தான்.

கிருபைராசா வேலையை ஆரம்பித்தான். பழைய கிடங்கை மூடியிருந்த சீமெந்து தட்டுக்களை அகற்றினன். சட்டென்று மணம் காற்றில் பரவியது.

உள்ளே போயிருந்த கள்ளு கிருபைராசா அரியண்டப் படாமலிருக்க விசுவாசமாக உதவி செய்தது. பனையால் இப்படியும் ஒரு பயன்!

கிருபைராசா சுறுசுறுப்பாக வேலையில் மூழ்கினன். வேகமாக 'அதை' இடம் மாற்றினன்.

முருகேசு குடும்பத்தினர் வீட்டை விட்டு வெளியேறவில்லை. ஜன்னல், கதவுகளையும் இறுக மூடிவிட்டு உள்ளேயேயிருந்தனர்.

பணத்தின் மூலம் தம்மைப் போலவே உள்ள ஒரு மனிதனை அடிமையாக்கி விட்டு அவர்கள் சுகமாக, வசதியாக இருந்தனர்.

கிருபைராசா வியர்த்திருந்தான். அவன் எப்படியும் வேலை செய்து முடித்து விட வேண்டும். மிச்சம் வைக்கக் கூடிய வேலையல்ல இது. அதோடு விரைவிலேயே வீட்டுக்கும் போய் விட வேண்டும். இரவு தாமதித்து செல்வது ஆபத்தானது.

வீட்டின் பின் கதவு தட்டப்பட்டது. முருகேசு எழுந்து வந்து திறந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

கிருபைராசா உடம்பு முழுவதும் ஈரமாக நின்று கொண்டிருந்தான். உடலைக் கழுவியிருந்தான். குடைக்கவில்லை.

"எல்லாம் முடிஞ்சுதா?"

"ஓம் ஐயா"

"சரி உப்பிடி உதிலை இரு. சாப்பாடு கொண்டு வாறன்"

முருகேசு சொல்லிவிட்டு உள்ளே போனார்.

கிருபைராசா சுற்றிலும் பார்த்தான். மூலையில் இருந்த தும்புத்தடி கண்ணில் பட்டது. அதை எடுத்து வந்து அந்த இடத்தை சுத்தமாக்கி விட்டு கதவருகே சப்பணம் இட்டு உட்கார்ந்தான்.

வீட்டின் பின் பக்கம் அது. வீட்டிலிருந்து இறக்கிப் போடப்பட்டிருந்த கூரை பதிவாக இறங்கி கொஞ்சத் தூரம் வந்திருந்தது. கீழே சீமெந்தினால் மேடை போடப்பட்டிருந்தது. ஒரு ஓரமாக அம்மியும், குளவியும் பதுங்கியிருந்தன.

சிறிது நேரத்திலே முருகேசு வாழை இலையுடன் வந்தார். கிருபைராசாவின் முன்னால் அதைப் போட்டு விட்டு திரும்பவும் உள்ளே போய் சோறு, கறிகளை எடுத்துக் கொண்டு வந்தார்.

பரிமாறி முடிந்ததும் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு மீண்டும் உள்ளே போய் விட்டார்.

கிருபைராசா ஆர்வமாகச் சாப்பிட்டான். கடுமையான வேலை அவன் செய்திருந்தான். எனவே அவனுக்கு நன்கு பசித்தது.

கொஞ்சத் தூரம் தள்ளி மரத்தினடியில் நாய் ஒன்று சுருண்டு படுத்திருந்தது. அது கிருபைராசாவையே பார்த்துக் கொண்டிருந்தது.

கிருபைராசா அடிக்கடி இங்கே வருவதால் அதற்கு அவனை நன்கு பழக்கமாகிப் போய் விட்டது. அதனால் அது குரைக்கவில்லை.

தனக்கும் இப்படித்தானே எஜமானர்கள் சாப்பாடு தருகிறார்கள்? அவர்களைப் போலவே உள்ள ஒரு மனிதனுக்கும் எனக்குப் போடுவது போலவே சாப்பாடு போடுகிறார்களே என்று அந்த நாய் ஆச்சரியப் பட்டிருக்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com

"நீங்களும் எல்லாரும் சாப்பிட வாங்கோ. எனக்கும் கடைசியா கழுவ சுகமாயிருக்கும்."

முருகேசுவின் மனைவியின் அறிவிப்பைத் தொடர்ந்து எல்லோரும் சாப்பாட்டு மேசையில் கூடினர்.

கதவு திறந்தே இருந்த படியால் கிருபைராசாவால் உள்ளே கதிரை, மேசைகளில் அமர்ந்து சாப்பிடுபவர்களை பார்க்க முடிந்தது. ஆனால் இந்த வித்தியாசம் அவனைப் பாதிக்கவில்லை.

அவனுக்குத் தேவை பணம். மகனைப் படிப்பிக்க வேண்டும். அவனுக்கு நல்லதொரு எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்க வேண்டும். அதற்காகத்தானே அவன் 'கக்கூஸ்' வேலை கூட செய்து பணம் சேர்க்கிறான்.

வெறுமனே உணர்ச்சிவசப்பட்டுவிட்டால் நடக்கப் போவது எதுவுமே இல்லை. மாறாக அவனதும், மனைவியினதும், மகனதும் கனவுகள் தான் சிதைந்து போய் விடும்.

போராட்டம் என்றால் எப்போதும் எதிரியுடன் நேருக்கு நேர் நின்று போரிடுவது மாத்திரம் ஆகாது. சந்தர்ப்பங்களைப் பொறுத்து சமயோசிதமாகப் பின்வாங்குவது, வளைந்து கொடுப்பது கூட பிற்கால வெற்றிக்குத்தானே ஒழிய கோழைத்தனமான செயல் அல்ல.

ஆனால் முழுப் பேரும் ஒதுங்கிப் போவதாலும் பாதிப்பு அதிகமாகிறது. ஐந்து விரல்களும் தனித் தனியாகத் தாம் ஒய்வெடுத்துக் கொள்ள நினைத்துக் கொண்டால் கையை நம்மால் சரியாகப் பாவிக்க முடியாது.

"கறியேதும் வேணுமெண்டாக் கேள்" முருகேசு உள்ளேயிருந்து குரல் கொடுத்தார்.

"எல்லாம் காணுமையா"

கிருபைராசா வழித்துத் துடைத்து சாப்பிட்டு விட்டு இலையைக் கொண்டுபோய் குப்பைக் கிடங்கினுள் வீசினான்.

கையைக் கழுவுவதற்காக கிணற்றடிக்கு அவன் வந்த போது அங்கு யாரும் இருக்கவில்லை.

கிணற்றில் தண்ணி இருந்தது. கப்பி இருந்தது. அதனுடன் தொடர்பு வைத்துக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டு வாளியும், கயிறும் கூட இருந்தன. இருந்தாலும் அவனால் கைகளைக் கழுவ முடியவில்லை. ஏனெனில் கிணற்றிலிருந்து நீரை அள்ள அவனுக்கு அனுமதி இல்லை!

முருகேசு வீட்டில் மட்டும் அல்ல. அவரைப் போன்ற ஏனைய மனிதர்களின் (மனிதர்களா?) வீட்டிலும் கிருபைராசாவைப் போன்றவர்கள் தாகத்துக்கு தண்ணீர் குடிக்க முடியாது. அப்படிப்பட்டதொரு 'விதியை' இந்த மனிதர்கள் உருவாக்கியிருந்தார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால் கிணற்றை உருவாக்கி, அதற்கொரு வடி-வம் கொடுத்து, முதல் ஊற்றில் கால்களை நனைப்பவர்களுக்குத்தான் பிற்பாடு அதே கிணற்றிலிருந்து தண்ணீர் அள்ளத் தடை!

கிருபைராசாவின் கை காய்ந்து போய் விட்டது. "ஐயா" என்று குரல் கொடுத்தான்.

"பொறடாப்பா வாறன். என் அவசரப்படுறாய்?"

முருகேசு சொல்லிக் கொண்டே வீட்டிற்குள்ளிருந்து வெளிப்பட்டார்.

தண்ணீரை அள்ளி வாளியைச் சரித்ததும் கிருபைராசா பவ்வியமாக் குனி-ந்து கைகளைக் கழுவிய பின் நீரை ஏந்திக் குடித்தான்.

"காணும் ஐயா" என்றதும் வாளி பழைய இடத்துக்குப் போய் விட்டது.

காற்சட்டையில் கையைத் துடைத்துக் கொண்டு வாசலில் வந்து நின்றான் கிருபைராசா.

உள்ளே போய் வந்த முருகேசு காசை எண்ணி அவனிடம் கொடுத்தார்.

"சரிதானே?"

கிருபைராசா பதில் சொல்லாமல் சிரித்தான்.

"பிறகு வாவன் பாப்பம்"

இனி நிற்பதால் பிரயோசனம் இல்லை என்று கிருபைராசாவுக்கு தெரியு-மாதலால் "சரி வாறன் ஐயா" என்று சொல்லி நடந்தான்.

இருள் சுத்தமாகப் பரவியிருந்தது. தெரு விளக்குகள் ஒழுங்கில்லாமல் வெளிச்சம் தந்து கொண்டிருந்தன.



படிப்பகம்

www.padippakam.com

பாதையில் யாருமே இல்லை. பகலிலேயே சனநடமாட்டத்தை தொகையாக காண்பது அரிது. இந்த நேரத்தில் கேட்கவா வேண்டும்.

வீடுகளும் அநேகமாக உறங்கிப் போய் விட்டன. நாய்கள் கூட விசயம் தெரிந்து பேசாமல் இருந்தன.

கிருபைராசா தன்னுடைய வீட்டுக்குப் போவதற்கு பிரதான பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியமே இல்லை. யாழ்ப்பாணத்திலா ஒழுங்கைகளுக்கு பஞ்சம்?. ரேகைகள் போல் ஒன்றையொன்று வெட்டி 'இந்த' நேரத்தில் மக்களுக்கு உதவிக் கொண்டிருந்தன.

செய்து முடித்த வேலை கிருபைராசாவின் வெறியைப் பெருமளவு முறித்திருந்தது. அதனால் பயம் வந்திருந்தது.

ஆபத்து ஆகாயத்திலிருந்தும் வரலாம். 'இனம் காணாத' நிலையிலும் வரலாம். எதுவுமே சொல்வதற்கு இல்லை.

மேகங்களின் நகர்வு புலனாகவில்லை. காற்றைக் கூட காணோம்.

கிருபைராசாவிற்கு வியர்க்க ஆரம்பித்திருந்தது. நாளை காலை அவனுக்கு வேலை இல்லை. ஆனால் இப்போது போனவுடன் படுக்க வேண்டும். சரியான களைப்பு அவனில் வந்திருந்தது.

வளைவால் திரும்பி அடுத்த ஒழுங்கையில் கால் வைத்த போது தான் அதைக் கண்டான் கிருபைராசா.

வேலியோடு ஒட்டியபடி உருவம் ஒன்று அசைந்தது.

கிருபைராசா நடப்பதை நிறுத்திக் கொண்டான். கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டு பார்த்தான். 'இந்த அகால வேளையில் யாராக இருக்கலாம்?' தனக்குள் யோசித்தவாறே மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்தான்.

கிருபைராசாவுக்குப் பயமாக இருந்தது. 'அடையாளம் காணப்படாமலேயே' அசம்பாவிதம் எதுவும் நடக்கலாம். ஏனென்றால் இப்போது அநேகமானோரிடம் அநேகம் துப்பாக்கி இருக்கிறது.

அசைந்த உருவம் சிறிது நேரம் நின்று ஏதோ சிந்தித்து விட்டு கிருபைராசாவை நோக்கி வந்தது.

கிருபைராசா அப்படியே நின்று விட்டான். அந்த உருவம் அவனை நெருங்கியதும் அடையாளம் கண்டு கொண்டவன் அதிர்ச்சியடைந்தான்.



படிப்பகம்

www.padippakam.com

மனித குல
வரலாற்றுப் புத்தகத்தில்
வாரி இறைக்கப்பட்ட
சேற்று நீரோட்டம்

# 6

"குடியுங்கோ ஆறப்போகுது" சாரதா ஞாபகப் படுத்தினள். அவள் ஜன்னலுக்கு திரைச்சீலைகளைக் கொழுவிக் கொண்டிருந்தாள்.

வாணியும், சுதாவும் தேநீரை எடுத்துப் பருகினர். கூடத்தில் இருந்த கதிரைகளில் அவர்கள் அருகருகாக அமர்ந்திருந்தனர்.

"கோம் வேர்க் எல்லாம் செய்து முடிச்சிட்டீரே?"

"ஊகும். எங்க நேரம்? இரவிரவா வீடியோல படம் பாத்தது."

சுதா கதைக்கையில் ஒரு 'விரைல்' இழையோடியது.

"என்ன படம் பார்த்தனீர்?" வாணி ஆதங்கத்தோடு கேட்டாள்.

"பூக்களைப் பறிக்காதீர்கள்"

"எப்பிடி நல்லதே?"

"நதியாவுக்காண்டிப் பாக்கலாம். நல்ல பாட்டுகள்"

அந்தப் படத்தை பார்க்க முடியவில்லையே என்று வாணி வருத்தப்பட்டாள்.

தொலைக்காட்சிப் பெட்டி, குளிர்சாதனப் பெட்டி, வீடியோ, ரூ இன் வன், எல்லாம் அந்த வீட்டின் உறுப்பினர் ஒருவர் வெளி நாட்டில் இருப்பதாக சாட்சி சொன்னன.

"சனி, ஞாயிறிலயும் படம் போடுவியளே?"

"கசற் ஏதும் சந்திச்சால் போடுவோம்"

வாணி கொஞ்சம் தாமதித்துக் கேட்டாள்.

"நல்ல படம் போட்டா எனக்கும் சொல்லுறீரே?"



படிப்பகம்

www.padippakam.com

"அதுக்கென்ன" சுதா சொல்லிவிட்டாளே ஒழிய அப்படிச் செய்யக் கூடியவள் அல்ல. நாகரிக நட்பு எல்லாம் உதட்டளவிலும், மேலாகவுமே தவிர ஆத்மார்த்தமாக அல்ல.

"நீரேன் மத்ஸ்சுக்கு ரியூசன் எடுக்கிறேல?"

"அந்தப் பாடம் பள்ளிக்கூடத்தில மாஸ்ரர் நல்லா படிப்பிக்கிறார் தானே? அதோட அப்பாவும் வீட்டில சொல்லித் தாறவர்." வாணி பெருமையாகச் சொன்னாள்.

"ரியூசனுக்குப் போறது படிக்க மட்டுமே? கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ண- லாம் என்டும் தானே." சுதா குரலை தாழ்த்தி சொன்னாள்.

"பள்ளிக்கூடத்துக்குப் போய் படிக்கிறியளோ? அல்லது சும்மாதான் போட்டு வாறியளோ?"

சாரதா முறுவலுடன் கேட்டாள். அதைக் கேட்டு யாரும் கோபப்பட- வில்லை. அவள் கேட்ட விதம் அப்படி.

"நாங்கள் ஒழுங்காய் போய் என்ன பிரயோசனம்? ரீச்சேஸ்மார் ஒழு- ங்கில்லையே." வாணி பழியை எவர் மீதோ போட்டாள்.

"ஓமோம். இப்ப எங்க அவைக்கு படிப்பிக்கிற அக்கறை இருக்குது. ரியூ- சன் குடுத்தாலே காணுமே. பிறகேன் பள்ளிக்கூடம் போகப் போயினம். லீவு போட்டிட்டு வீட்டில இருந்து வீடியோ பாப்பினம். கேட்டா றவலிங் கஸ்டம் என்டு நல்லா சாட்டு சொல்லிப் போடுவினம்"

சாரதா மூச்சு விடாமல் கதைத்து முடித்தாள்.

எவரும் தம்முடைய நிலையில் மற்றவர்களை வைத்துப் பார்ப்பதில்லை. நாட்டில் நடந்து கொண்டிருக்கும் பிரச்சனைகளால் தமக்கு ஏற்படும் சிரம- ங்கள் ஏன் மற்றவர்களுக்கும் நேரக்கூடிய சாத்தியங்கள் இருக்கக் கூடாது என இவர்கள் சிந்தித்துப் பார்க்கக் கூடாது?.

"வாணி, உம்மோட ஒரு விசயம் கதைக்க வேணுமென்டு கன நாளா நினைக்கிறன். இன்டைக்குத்தான் சான்ஸ் கிடைச்சிருக்கு" சுதா கொஞ்சம் இழு- த்துக் கதைத்தாள்.

"என்ன விசயம். கதையுமென்" வாணி ஆவலானாள்.



படிப்பகம்

www.padippakam.com

"நீர் பிறகு என்னோடை கோபிக்க கூடாது"

"இல்லை. சொல்லும்"

"ஒன்றும் நினைக்க மாட்டீர்தானே?"

"இல்லை. சொல்லுமன்"

சுதா பீடிகை போடப்போட வாணியின் பொறுமை விடை பெற்றுக் கொண்டிருந்தது.

"உம்மட அண்ணை ஏன் உவன் ரவியோட சுத்துறார். அவன்ரை வீட்டை கூடப் போறாராம்"

சுதா சொல்லி விட்டு வாணியையே பார்த்தாள். சாரதாவும் இவர்களையே கவனித்துக் கொண்டிருந்தாள்.

வாணிக்கு ஒரு மாதிரியாகப் போய்விட்டது. தலையைத் திருப்பி சுவரில் மாட்டியிருந்த படங்களைப் பார்த்தாள்.

சுகுமார், ரவி படிக்கும் அதே பாடசாலையில்தான் வாணியும், சுதாவும் படிக்கிறார்கள். இருந்தும் சுதா கொடுத்த, கதைத்த மரியாதையில் நிறையவே வேறுபாடிருந்தது.

சுதாவைப் போன்றவர்கள் எல்லாம் ஏன்தான் பாடசாலைக்குப் போக வேண்டும்?

ஆரம்பமே பாரதி பாடலில்தான். நாடி, நரம்பு, இழையங்கள், கலங்கள் எல்லாம் எல்லா மனிதருக்கும் பொதுவானவைதான் என்று விஞ்ஞானத்தில் படிக்கிறார்கள். இருந்தும் பயனில்லையே?

படித்ததெல்லாம் பரீட்சைக்காக மட்டும் தான் என்பது போலத்தானே இவர்கள் நடந்து கொள்கிறார்கள்.

ஒரு வேளை ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது என்பதை தப்பாகப் புரிந்து கொண்டார்களோ?

பிள்ளைகள்தான் இப்படி படிப்பை மதியாமல் பிழையாக நடந்து கொள்கிறார்கள் என்றால் பெற்றோர்கள் அவர்களைத் திருத்தக் கூடாதோ?



படிப்பகம்

www.padippakam.com

மாறாக அவர்களும் சேர்ந்து தானே மனிதர்களுக்கிடையேயான வேற்றுமையை வளர்த்துக் கொள்ளுகிறார்கள்.

இந்த மாதிரி நடந்து கொள்வதுதான் நாகரிகம் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள் வெறும் உடைகளும், வெளிப்பூச்சுகளும், அலங்காரங்களும் தான் நாகரிகம் என்று நம்பும் முட்டாள்கள்தான்.

"புஸ்பா தங்கத்துரையின்ரை நொவல் வைச்சிருக்கிறீரா?"

நீண்ட மௌனத்தை சுதா கலைத்தாள்.

"புதிசா வாங்கயில்லை. நீர் வாசிச்ச பழசு ரண்டும் தான் இருக்கு"

வாணி இன்னும் சகஜமாகவில்லை என்பதை முகம் காட்டியது.

அவளுக்கும் சுகுமார் ரவியுடன் பழகுவது பிடிக்கவில்லை. அம்மாவுடன் சேர்ந்து எத்தனையோ முறை சுகுமாருடன் வாதாடியிருக்கிறாள். அம்மாவுடன் 'சேர்ந்து'என்ற படியால் தப்பியது. இல்லையோ சுகுமார் அவள் மேல் 'இராணுவ'நடவடிக்கையே எடுத்திருப்பான்.

"இந்த மாத ராணிமுத்திலை சுஜாதாவின்ரை கதை. நான் கட்டாயம் வாங்குவன்."

"உம்" -வாணி

சாரதா உள்ளே போனாள். மீண்டும் இருவரும் மௌனமானார்கள்.

"நேரம் போட்டுது. நான் போகப் போறன். கொப்பியைத் தாறீரே?"

வாணி அங்கு வந்ததே கொப்பி வாங்கத்தான்.

சுதா உள்ளே போய் கொப்பியை எடுத்து வந்து கொடுத்தாள்.

"போட்டு வாறன்."

"படம் போட்டா கூப்பிடுறன்"

வாணி போன பின் சுதா உள்ளே வந்த போது சாரதா எதிர்ப்பட்டாள்.



படிப்பகம்

www.padippakam.com

"நீ ஏன் அந்தப் பிள்ளையோட இப்பிடி கதைச்சனி? பாவம். அதுக்கு முகமே மாறிப் போச்சு."

"கட்டாயம் கதைக்கத்தான் வேணும். நாள் பிறின்சிப்பலின்ரை மகள் என்டு அவக்கு பெரிய எண்ணம். பள்ளிக்கூடத்திலையெல்லோ அவவின்ரை வெலை பாக்க வேணும்"

சுதாவின் சிரிப்பில் திருப்தி கலந்திருந்தது. அவளுக்குத் தெரியும் தாங்கள் கதைத்தது வீட்டில் எப்படி வேலை செய்யப் போகிறதென்று.

இதுவல்லவோ நட்பு. (?)



படிப்பகம்

www.padippakam.com

அன்புத் தாமரை இதழ்களில்
தெறிக்கும்
உருக்கப்பட்ட ஈயத்துளிகள்
உலைக்களங்கள் உடைக்கப்படாதவரை
துளிகள்
7 தெறித்துக் கொண்டேயிருக்கும்.

இரவு வேலைக்கான முறை இன்று கிருபைராசாவுக்கு.

விருந்தையில் உட்கார்ந்து அவன் புகை விட்டுக் கொண்டிருந்தான். வாயிலிருந்த பீடி சிறுத்துக் கொண்டிருந்தது.

எட்டு மணி தாண்டியிருந்தாலும் எங்கும் நிசப்தமாய் இருந்தது. பெரியாஸ்பத்திரியின் எல்லா விளக்குகளும் எரிந்து கொண்டிருந்தன.

தாதிமார்கள், வைத்தியர்கள் தூக்கத்தைக் கலைத்துக் கொண்டு அலுவலாகவும், அளவளாவிக் கொண்டும் இருந்தனர்.

முதலுதவி வாகனம் வாசலில் தயாராக நின்றது. சாரதி மங்கிய வெளிச்சத்தில் ஏதோ படித்துக் கொண்டிருந்தான்.

ஏறக்குறைய போர்க்காலத்தில் எப்படியிருக்குமோ அப்படித்தானிருந்தது அந்தக் கட்டடம். இப்போது மட்டுமல்ல, எப்போது தமிழரின் குருதி மண்ணை நனைக்க ஆரம்பித்திருந்ததோ அப்போதிலிருந்தே இப்படித்தான்.

மெல்ல மெல்ல சூடு பிடித்து இப்போது உச்ச நிலையில் இயங்கிக் கொண்டிருந்தது அந்த வைத்தியசாலை. வைத்தியசாலை மட்டுமா?

இராணுவத்தின் அட்டகாசங்களுக்கு மத்தியில்தான் அங்கு வேலை செய்பவர்கள் வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

மழைத் துளிகள் சில மண்ணில் பதிந்தன. காற்று குளிரையும் இணைத்துக் கொண்டு தயங்கியது.

கிருபைராசா பீடியை கடைசி இழுப்பு இழுத்து விட்டு அணைத்து தூர எறிந்தான். வெளியே வந்து வானத்தை அண்ணாந்து பார்த்தான். இருட்டில் கால நிலையை அறிய முடியவில்லை. திரும்பவும் வந்து உட்கார்ந்தான்.

சுவரில் ஒட்டியிருந்த பல்லி ஒன்று சத்தம் போட்டது. சாப்பாடு கிடைக்காத ஏக்கம் அதற்கு. அதற்கு மட்டுமா?.



படிப்பகம்

www.padippakam.com

சில நாட்களுக்கு முன் முருகேசு வீட்டில் வேலை செய்து விட்டு வந்த இரவு நேர்ந்த சம்பவம் கிருபைராசாவுக்கு இப்போது ஞாபகத்துக்கு வந்தது. ரவியிடம் கேட்க வேண்டும் என்று பலமுறை நினைத்தாலும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இல்லையென்றால் மறந்து போய் விடுகிறது. நாளை கட்டாயமாக கேட்க வேண்டும் என நினைத்துக் கொண்டான்.

"என்ன கிருபைராசா யோசினை?"

தூய வெள்ளை ஆடையில் தாதி ஒருவள் நின்றாள்.

"ஒன்றுமில்லையக்கா. சும்மா விட்டு யோசினைதான்"

வயதால் தங்கை முறை ஆக வேண்டியவர்களையெல்லாம் அக்கா ஆக்க வேண்டிய நிலை அவனுக்கு.

இப்படி வித்தியாசமான மரியாதையை அவர்களாவது விரும்பாமல் இருக்க வேண்டுமே? அது தான் இல்லை. தம்மைக் கண்டதும் இவனைப் போன்றவர்கள் எழுந்து மரியாதை செய்ய வேண்டும் என்று தான் எதிர்பார்க்கிறார்கள்.

"கொழும்பு ஆசுப்பத்திரியில எல்லாம் வேலை நிறுத்தமாம்" கிருபைராசா பேச்சுக் கொடுத்தான்.

"அங்க என்ன இங்கயும் செய்யலாம். ஆர பாதிப்பு அருக்கு? எங்கட சனங்களுக்குத் தானே?"

"------------------"

"ஒவ்வொரு நாளும் இங்கருக்குத்துயிரும், குலையுயிருமா சனங்கள் வருகுது. இந்த நேரத்தில நாங்களும் ஸ்ரைக் பண்ணினா ஆருக்கு நட்டம்?"

"உண்மைதான்"

கிருபைராசா ஆமோதித்தான். இந்தக் கால கட்டத்தில் எல்லோரும் ஏதோ ஒரு வழியில் தியாகம் செய்து கொண்டுதானிருக்கிறார்கள் என்பதை அறிந்து கிருபைராசா பெருமைப்பட்டான்.

"கையில என்னக்கா வச்சிருக்கிறியள்?"

"நாவல். இரவு முழுக்க முழிச்சிருக்க வேணுமே?" அவள் சொல்லிக்கொண்டே போனாள்.



படிப்பகம்

www.padippakam.com

கிருபைராசா மீண்டும் கனித்தான். எதைப் பற்றி சிந்திக்கலாம் என்றே சிந்திக்க முடியாதிருந்தது.

கரைகளில் போடப்பட்டிருக்கும் ஒருகளை எண்ணலாமா? அல்லது அதற்கும் மேலாக பரவியிருக்கும் நட்சத்திரங்களை எண்ணலாமா?

'ஓ! இந்த நட்சத்திரங்கள் தான் எவ்வளவு அதிஸ்டம் செய்தவை. ஒரு வித பிரச்சனைகளும் இல்லாமல், எதிர்காலம் பற்றிய கவலை இல்லாமல், நிம்மதியாகவும், கண் சிமிட்டிக் கொண்டும், நிறம் மாறிக் கொண்டும்......

நிறம் மாறுபவைக்கு எந்தக் குறையும் வராதோ?'

கிருபைராசாவுக்கு தனிமை அவசியம் வேண்டும். எழுந்து நோயாளர் விடுதிகளை நோக்கி நடந்தான்.

முறிவு, நெறிவு அடைந்தவர்களுக்கான விடுதி.

இட வசதியின்மையால் வெளியிலும் கட்டில்கள் படுத்திருந்தன. கிருபைராசா ஒவ்வொரு கட்டில்களாகப் பார்த்துக் கொண்டு நடந்தான்.

"என்ன கிருபை, இரவு வேலையே?"

குரல் கேட்டு முன்னால் திரும்பிப் பார்த்தான் கிருபைராசா.

தலை தவிர்ந்த ஏனையவற்றை போர்வைக்குள் மறைத்திருந்த சரவணன் இவனைப் பார்த்து சிரித்தான்.

"என்னடாப்பா, வெளியில படுத்திருக்கிறாய்?" அவனை நெருங்கினான் கிருபைராசா.

"ஆரோ டாக்குத்தற்றை மாமன்காரனைக் கொண்டு வந்தவங்கள். இட-மில்லாததால நான் இங்க வந்திட்டன்."

"குளிரேலயே?"

"அதுதான் போத்திக் கொண்டு கிடக்கிறன்."

"மழை வரும் போலயும் கிடக்கு."

"அதுக்கிடையில நான் படுத்திருவன்."



படிப்பகம்

www.padippakam.com

"ஆ சனியன்"

பக்கத்தால் கட்டிலிலிருந்த உடல் ஒன்று எழுந்து 'எதையோ' தேடியது.

"என்னப்பு தேடிறியள்?"

"ஒரே மூட்டைப்பூச்சி மனிசரைப் படுக்க விடுகில்லை." முயற்சியைத் தொடர்ந்து கொண்டே உடல் தொடர்ந்து கதைத்தது.

மனித இரத்தம் குடிக்கும் ஜீவராசிகளுக்கு இந்த நாட்டில் அழிவே ஏற்படப் போவதில்லையா?

"இப்ப எப்பிடி இருக்கு? டாக்குத்தர் வந்து பாத்தவரே?" கிருபைராசா பரிவுடன் கேட்டான்.

சரவணனுக்கு அது இதமாக இருந்தது. "நோ அவ்வளவென்டு இல்லை. கட்டை எப்ப அவுப்பங்கள் எண்டிருக்கு."

"ஏன் அவசரப்படுவான். வருத்தம் மாறி ஆறுதலாய் கட்டைப் பிரிக்கலாம்"

"நீ வேற. நான் இஞ்ச படுத்துக் கிடந்தால் ஆர் தொழிலைப் பாக்கிறது? இப்ப பெடியனைத்தான் விட்டிருக்கிறன். அவனும் எப்ப விழுந்து முறிவானோ என்டு ஒரே நெஞ்சிடியா இருக்கு." சரவணனின் குரலில் பாசம் கலங்கியது.

"உனக்கென்ன விசரே? அந்த சின்னப் பெடியனையே மரமேற விட்டனி?"

சரவணன் கொஞ்சம் மௌனித்தான்.

"கிருபை, எனக்கென்ன மகனில கோவமே? நான் இஞ்ச கிடந்தால் வீட்டில என்னென்டு சாப்பிடுங்கள்?"

இப்போது கிருபைராசா மௌனமானான்.

"அதோட அவனும் நாளைக்கு தொழில் செய்ய வேணும் தானே? இப்பவே எல்லாத்தையும் பழகட்டும்." சரவணனின் குரல் தழதழத்தது.

கிருபைராசா எதுவுமே சொல்லவில்லை. 'என்னைப் பார். நானும் என்னுடைய மகனை என்னுடைய தொழிலுக்காக வா வளர்க்கின்றேன்? இல்லையே. அவன் படிக்கின்றான். நானே நல்ல எதிர்காலத்தை சிருஷ்டித்துக் கொள்வான். எங்களுக்காக இல்லாவிடினும் தனக்காக, தன்னுடைய சந்ததிக்காக' இப்படி கிருபைராசா சொல்லவில்லை. அவனால் கூற முடியாது. ஏனென்றால் அவனால் அவர்களுக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க முடியாது.



படிப்பகம்

www.padippakam.com

"வீட்டால ஆரேன் வந்தவையே?"

"மத்தியானம் மனுசி வந்தது."

ஆனலும் அவனுக்கு ஆஸ்பத்திரிச் சாப்பாடுதான் என்பது கிருபைராசாவுக்கு தெரியும்.

அதன் பிறகு வேறு பல விசயங்களைப் பற்றி அவர்கள் கதைத்துக் கொண்டார்கள்.

பாதிப்பால், பரிவால், பாசத்தால் ஏதோவால் இணைந்த இதயங்கள் சுமைகளைப் பகிர்ந்து கொண்டன.



படிப்பகம்

www.padippakam.com

பொறாமை ஒளியால்
தாக்கப் பட்ட
பூத மாளிகை
ஆனால்
இன்னமும்
8 தகர்கப் படாத
அத்திவாரம்

"ஏன்டி சிணுங்கிக் கொண்டிருக்கிறாய்?"

"------- --"

"சொல்லிப்போட்டு அழன்"

"சுகுமார் அடிச்சுப் போட்டான்"

தேவகி சுகுமாரின் பக்கம் திரும்பினாள்.

"ஏன் அவளுக்கு அடிச்சனி?"

"அவளையே கேளுங்கோ"சுகுமார் கதவின் கைப்பிடியை திருகிக் கொண்டிருந்தான்.

"ஏன் நீயே சொல்லன்?"தேவகி வெப்பமாகிக் கொண்டிருந்தாள்.

"அவள் தான் தேவையில்லாமல் என்னோடை கொழுவினவள்"

"பொய் சொல்லுறான். உவன்தான் வேணுமெண்டு அடிச்சவன்"வாணி குறுக்கிட்டுக் கத்தினாள்.

"பிறகும் வேண்டப் போறாய்"சுகுமார் பயமுறுத்தினான்.

"நீ போடி உள்ளுக்கு"வாணியைப் பார்த்துக் கத்திவிட்டு சுகுமாருக்கு கிட்ட வந்தாள் தேவகி.

"அவள் உன்ரை தங்கச்சியோ?இல்லாட்டி வேற ஆரோவோ?ஒவ்வொருநாளும் அடிச்சுக் கொல்லுறதை விட ஒரேயடியா அவளைச் சாக்கொல்லி விடு"

அம்மாவின் பேச்சுப் போகிற போக்கில் சுகுமாருக்கு விளங்கி விட்டது இனியும் நின்றால் அசம்பாவிதம் எதுவும் நடக்கலாம் என்று. அதனால் அவன் அறைக்குள் போய் விட்டான்.



படிப்பகம்

www.padippakam.com

# நிஜங்கள்



**பார்த்திபன்**

வெளியீடு : 1

படிப்பகம்

www.padippakam.com

"சகோதரங்கள் மாதிரியே இருக்குதுகள். பாம்பும், கீரியும் மாதிரி எப்ப பாத்தாலும் சண்டை. வெளியில பழங்கிக் கொண்டு திரிவினம். வீட்டுக்குள்ளதான் அவையின்ரை வீரம்." தேவகி தனியே நின்று பொரிந்து கொண்டிருந்தாள்.

"என்னப்பா, உம்மடபாட்டில நின்டு கதைக்கிறீர்?" அப்போது தான் ராமலிங்கம் வெளியேயிருந்து வந்து கொண்டிருந்தார்.

மனைவியையும் 'நீர்' மரியாதை போட்டு தான் கதைப்பார். இந்த பண்பு எத்தனை பேருக்கு வரும்? திருமணம் செய்து கொண்டபின் வீட்டிற்கு வருபவள் மனைவி என்பதும் அடிமை என்பது போலத்தானே பலரும் நடந்து கொள்கிறார்கள். வேடிக்கை என்னவென்றால் மாப்பிள்ளைகள்தான் விலைக்கு வேண்டப் படுகிறார்கள்!

"வந்திட்டியளே? வீட்டில கொலை நடந்தாலும் உங்களுக்குத் தெரியாது. ஒன்டிலயும் அக்கறை இல்லாம இருங்கோ." பேச ஆள் கிடைத்து விட்ட பூரிப்பில் தேவகியின் குரல் மீண்டும் உயர்ந்தது.

"விசயத்தை சொல்லுமன். என்னன்டு பாப்பம்"

"உங்கட புத்திரன் வாணியை அடிஅடியென்டு அடிச்சுப் போட்டான். என்னென்டு கூப்பிட்டு விசாரியுங்கோ பாப்பம்"

ராமலிங்கம் உணர்ச்சி மாறாமல் சுகுமாரைக் கூப்பிட்டார்.

"என்னப்பா?" சுகுமார் அறையிலிருந்து வெளிப்பட்டான்.

"வாணிக்கு அடிச்சனியா?"

"ம்"

"ஏன்?"

"ரவியைப் பற்றி தேவையில்லாமல் கதைச்சாள். அதுதான் கோபம் வந்து அடிச்சுப் போட்டேன்."

ராமலிங்கத்துக்கு என்ன நடந்திருக்கும் என்று புரிந்து போய் விட்டது. அவருக்கு வாணியையும் தெரியும். சுகுமாரையும் தெரியும்.

"எப்பிடியென்டாலும் நீ அவளுக்கு அடிச்சிருக்கப் படாது. அவள் பொம்பிளைப் பிள்ளையெல்லே. கை நீட்டி அடிக்கலாமே?"



படிப்பகம்

www.padippakam.com

சுகுமார் பதிலளிக்கவில்லை.

"சரி சரி.ஏதோ எழுத வேணுமெண்டாய்.எழுதுவோமே?"

"ம்"

இருவரும் சேர்ந்து அறைக்குள் போனபோது தேவகி முழு ஆத்திரமாய் இருந்தாள்.ராமலிங்கம் சுகுமாரை போதியளவு கண்டிக்கவில்லை என்பது அவளது அபிப்பிராயம்.தன்னுடைய கோபத்தைக் காட்ட அவளுக்கிருந்த அடுத்த சந்தர்ப்பம் சமையல் தான்.வேகமாக சமையலறைக்குள் போனாள் அவள்.

சிறிது நேரத்தின் பின் சமையலறையில் பாத்திரங்கள் வாத்திய விருந்து நடாத்தின.

"என்ன எழுதப்போறாய்?"

ராமலிங்கம் வசதியாக கதிரையை இழுத்துப் போட்டு அமர்ந்தார்.

"சாதியைப் பற்றி"

சுகுமார் கடதாசி,பேனா ஆகியவற்றை அதனதன் இடங்களிலிருந்து எடுத்துக் கொண்டு வந்தான்.

"கவிதையா?கட்டுரையா?"

"கதை"

"அதுக்கு நான் ஏன்? நீயெல்லோ உன்ரை கற்பனையைப் பாவிச்சு எழுத வேணும்"

"நான் எழுதப் போறது கற்பனை கலக்காத கதை.அதுக்கு எனக்கு கொஞ்சம் பொயின்ஸ் வேணும்."

ராமலிங்கம் யோசனை செய்கிறார் என்பதை நெற்றி சுருக்கங்கள் விழுத்திக் காட்டியது.

"நான் சும்மா சொல்லுறதைவிட நீ கேள்வியாக் கேட்டா எக்ஸ்பிளெயின் பண்ணிறன்."

சுகுமாருக்கும் இந்த யோசனை பிடித்துப் போய்விட்டது.



படிப்பகம்

www.padippakam.com

"இந்த சாதி வேற்றுமைகள் எப்படி ஆரம்பமாயின?"

"மேலாலயே சொல்லுறன். எனக்குத் தெரிஞ்சதைத்தான் சொல்லுறன். சில வேளைகளில் இவை தவறாயும் இருக்கலாம். அந்த நாள் ராசா, ராணி காலத்திலேயே அவர்கள் தங்களுடைய வசதிகளுக்காக வசதியில்லாதவர்களை பணத்தினால் அடிமையாக்கினர்கள். ஏழ்மையினாலும், போதிய படிப்பறிவு இல்லாத-தாலும் பலர் சுலபமாக அடிமையாகிப் போயினர். குறிக்கப் பட்ட தொழில்-களுக்கு அவர்கள் பயிற்றப்பட்டு, பழக்கப் பட்டார்கள். அந்த தொழில்களுக்கு வைக்கப் பட்ட பெயர்களே பிற்பாடு சாதிகளாக பரிணமித்தன. அந்த தொழி-ல்களைச் செய்தவர்கள் பரம்பரை, பரம்பரையாக அதையே தொடர்ந்ததால் மற்றவர்களிலிருந்து விலகிப் போனர்கள். மற்றவர்கள் தமது சுமைகளை இவ-ர்கள் மீது இறக்கி வைக்க இவர்கள் வழி அமைத்துக் கொடுத்ததால் இவர்-கள் தாழ்ந்து போக வேண்டியதாயிற்று."

"சாதி வேற்றுமைகளால் பாதிப்புக்குள்ளானவர்கள் ஏன் கல்வியை விரும்-புவதில்லை? ஏன் படிப்பதில் போதிய அக்கறை காட்டுவதில்லை?"

"ஒரு மனிதனின் சராசரி அத்தியாவசியங்கள் உணவு, உடை, உறைவிடம். இதற்கு அவசியமானது பணம். இது அவ்வளவு சுலபத்தில் கிடைக்க கூடிய ஒன்ற-ல்ல. எல்லோரும் மிகவும் பிரயாசைப் பட்டுத்தான் பணத்தை தேடிக் கொள்-கிறார்கள். அதற்கு இவர்கள் விதிவிலக்கில்லை. வீட்டில் உள்ள ஒரு அங்கத்தவரை பாடசாலைக்கு அனுப்பினாலும் வருமானத்தில் அவர்கள் குறிப்பிட்ட பங்கை இழ-க்கிறார்கள். வருமானத்தைதான் பெரிது படுத்தி பார்க்கிறார்களே தவிர அந்த இழப்பை ஏற்று தியாகம் செய்ய யாரும் தயாரில்லை."

"இது மட்டும் தான் காரணமா?"

"சிறு வயது முதலே குறிப்பிட்ட சூழ் நிலையில் வளரும் குழந்தைக்கு அதுவே பழக்கமாகிப் போய் விடுகிறது. அதையே விரும்பி விடுகிறது. அல்லது விரும்ப வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகி விடுகிறது. அந்நிய சூழ்நிலையைப் பற்றி காரணமில்லாத பயம் ஏற்பட்டு தாழ்வு மனப்பான்மை உருவாகி விடுகிறது. இதுவும் காரணமாயிருக்கலாம்."

"இந்த நவீன யுகத்தில் கூட இவர்கள் ஏனையோரால் சேர்த்துக் கொள்-ளப் படாமல் ஒதுக்கி வைக்கப் படுவதன் காரணம் என்ன?"

"எனது அபிப்பிராயப்படி சுப்பரவின்மையாலேயே இவர்கள் பெரும்பா-லோனவர்களால் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை."

"வறுமையால்தான் இவர்கள் சுத்தமின்மையாக இருக்கிறார்கள் என்றும் சொல்லலாம்தானே?"



படிப்பகம்

"அப்படிச் சொல்லவே முடியாது. கந்தையானாலும் கசக்கிக் கட்டு என்பதுதான் பொன் மொழி. அப்பரவுக்கு வசதி அவசியமில்லை. சுத்தம் என்றால் அலங்காரம், ஆடம்பரம் என்பதல்ல . இருப்பதைக் கொண்டே சுத்தத்தை பேணலாம்."

"ஒதுக்கப் படுகிறவர்களால் எப்படி நல்ல பழக்க வழக்கங்களைப் பின்பற்றிக் கொள்ள முடியும்?"

"முதலிலேயே சொல்லிவிட்டேன் பாடசாலை போக வேண்டும் என்று. மற்றவர்களைப் பார்த்தும் பின்பற்றிக் கொள்ளலாம். எல்லாவற்றிற்கும் மனம் தான் முக்கியம்."

"இவர்களுக்கும், தங்களுக்கும் இடையில் நிரந்தர இடைவெளியை நிர்மாணிக்க விரும்புவர்களைப் பற்றி?"

"அவர்களை மனிதர்களாக ஏற்றுக் கொள்ளவே முடியாது. ஏனென்றால் ஆறறிவு உள்ளவர்களைத்தான் பொதுவாக மனிதன் என்று சொல்கிறோம்."

"அப்படியென்றால் இந்த விசயத்தில் மனிதன் என்பவன் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?"

"முதலில் மனிதர்களுக்கிடையில் எந்த இடைவெளியோ, வேற்றுமையோ இல்லை, இருக்கக் கூடாது என்பதை மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக ஆசிரியனும் மனிதன்தான். மாணவனும் மனிதன்தான். இவர்களுக்கிடையில் ஆசிரியன் மாணவன் என்ற பொதுவான வித்தியாசம்தான் இருக்க வேண்டும். அந்த வித்தியாசம் எவருக்கும் வித்தியாசமானதாக இருக்கக் கூடாது"

சுகுமார் எழுதிய குறிப்புகளின் கீழ் கோடுகள் போட்டான்.

"படித்த இளைஞர்கள் எல்லோரும் முட்டாள்தனமான தடைகளை உதாசீனப் படுத்திவிட்டு இடைவெளிகளை இல்லாதொழிக்க முழு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். மேலதிக நேரங்களில் இலவசமாக படிப்புச் சொல்லிக் கொடுக்கலாம். சுத்தம், நல்ல பழக்கங்களைப் பிரச்சாரம் செய்யலாம். தம்முடைய வயதினரை தோழராக்கி, அவர்களுடன் நெருங்கிப் பழகி, அவர்களுடைய குறைகளை அறிந்து கொள்ள வேண்டும். அதனைத் தீர்க்க உதவ வேண்டும்."

"இப்படி எல்லோரும் செய்வார்களா?"

"செய்ய வேண்டும். அதோடு இன்னுமொன்று"

என்ன என்பது போல அப்பாவைப் பார்த்தான் சுகுமார். அவனுக்கு ஒரே ஆச்சரியம். 'அப்பாவுக்குள் இவ்வளவு விசயங்களா?'

www.padippakam.com

"கலப்புத் திருமணம். இதயங்கள் இணைந்த தம்பதிகள் ஆகும்போது கல-ப்பு என்ற சொல் இல்லாமல் போகிறது."

"இவ்வளவும் போதும்"

"கதைக்குப் பேர் வைச்சாச்சா?"

"இன்னும் இல்லை."

இருவரும் அறையை விட்டு வெளியே வந்த போது தேவகியும், வாணியும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

இது
ஒரு சதிக்குழி
வெட்டப்பட்ட நிலங்கள்
வித்தியாசமானவை
அதிலே
கொட்டப்பட்ட கொடுமைகள்
ஏராளம்
இருந்தும்
9 இன்னமும் நிறைவு படாத
நில விரிவு".

பகல் பத்து மணியிருக்கலாம். இயந்திரத்தனமாக இயங்கிக் கொண்டிருந்த யாழ் நகரம் திடீரென பரபரப்பானது.

கோட்டையிலிருந்து 'செல்கள்' பறந்து வந்தன. பஸ் தரிப்பு நிலையம், பழக்கடை, புடவைக் கடை என்று அவை தடுமாறிக் கொண்டிருந்தன.

இதற்கெல்லாம் தயாராக நின்றது போல் வாகனங்கள் புறப்பட்டு விரைந்தன. கடைகள் கதவுகளைப் பூட்டிக் கொண்டன. எல்லோரும் அப்போதைய தஞ்சங்களைத் தேடி ஓடினர்.

புடவைக்கடை ஒன்று தீப்பிடித்து எரிந்தது. கரும் புகை காற்றோடு ஐக்கியமாகிக் கொண்டிருந்தது.

துப்பாக்கி இருக்கின்ற, இல்லாத பலர் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர். தீயை அணைக்க முயற்சி செய்தார்கள். காயம் பட்டவர்களை கவனித்து வைத்தியசாலைக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

அகப்பட்ட வாகனங்களில் ஏற்றி அனுப்பப்பட்டவர்கள் 'பெரியாஸ்பத்திரியில் அவசரமாக இறக்கப் பட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போதுதான் அது நிகழ்ந்தது.

பெரியாஸ்பத்திரியின் சிறுபிள்ளைகளின்விடுதிக்குள் 'செல்கள்' வந்து விழுந்தன.

தாய்மார்கள் குழந்தைகளை அணைத்துக் கொண்டு வெளியே ஓடி வந்தார்கள்.

எங்கும் ஒரே கூச்சல். பீதி. ஓட்டம். காயம். இரத்தம்.



படிப்பகம்

ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைப் பிரிவு துரிதமாக இயங்கிக் கொண்டிருந்தது.

இரத்ததானங்கள் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன.

பின்னேரங்கள் விருதியில் அவசர வேலைகளை செய்து முடித்து விட்டு கிருபைராசா வெளிப்பட்டான்.

"விலத்துங்கோ விலத்துங்கோ"

கிருபைராசா வழி விட்டு விலகியவாறே என்ன என்று பார்த்தான்.

வெள்ளை உடை போட்டிருந்தவர்கள் தள்ளு வண்டியில் யாரோவை வைத்து தள்ளிக் கொண்டு வந்தார்கள். சிவப்பு இரத்தம் அவரை நன்கு நனைத்திருந்தது.

கிருபைராசா அந்த 'அவரை' அடையாளம் கண்டு கொண்டான்.

முருகேசு.

கிருபைராசா அவர்களை பின் தொடர்ந்தான்.

சிகிச்சைப் பிரிவு நெருங்கியதும் பின் தொடர்ந்தவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டார்கள்.

முருகேசு கட்டிலுக்கு மாற்றப் பட்டதும் தள்ளுவண்டி விடை பெற்றுப் போனது. சிகிச்சை ஆரம்பமானது.

தாங்கிகள், குழாய்கள் கொண்டு வரப்பட்டன. வெள்ளை உருப்புகள் ஓடித் திரிந்தன.

கிருபைராசா வெளியிலிருந்தே நிலைமையை அனுமானித்துக் கொண்டான். கதைக்க வேண்டியவர்களுடன் கதைத்து செய்ய வேண்டிய பரிசோதனைகள் செய்யப் பட்டபின் கிருபைராசாவும் கட்டிலில் படுக்க வைக்கப் பட்டான்

ஊசி ஒன்று நாளத்துடன் கிருபைராசாவின் கையினுள்ளே சிறிது தூரம் வரை போய் குருதி குடிக்க ஆரம்பித்தது.

வெள்ளை நிறமான குழாய்கள் சிவப்பாகின. செங்குழியங்களும், வெண்குழியங்களும் முருகேசுவினுள் ஊடுருவிக் கொண்டிருந்தன.

www.padippakam.com

முருகேசு மயக்கமாகவேயிருந்தார். இப்போது அந்த இடத்தில் எந்த பாகுபாடும் இருக்கவில்லை.

ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் உயிருக்கு உரம் போட்டுக் கொண்டிருந்தான். சிவந்த இரத்தம் சாதி வேறுபாடுகள் அறியாமல் இரண்டறக் கலந்து கொண்டிருந்தது.

முருகேசு இன்னும் சிறிது நேரத்தில் கண் திறந்து விடுவார். கிருபைராசாவின் குருதி தன்னுடலில் பரவுவதை அறிந்து கொள்வார்.

சாதி குறைந்தவனின் குருதியை தன்னுள் எப்படி அனுமதிக்கலாம் என்று ஆத்திரப்படுவாரா?

இருவரின் இரத்தமும் வித்தியாசமில்லாத சிவப்பு நிறந்தான் என்பதை அறிந்து ஆச்சரியப்படுவாரா ?

பெருந்தன்மையாக இரத்ததானம் செய்பவனுக்கு தான் கொடுத்து வந்த மரியாதையை நினைத்து வேதனைப்படுவாரா?

இல்லையென்றால் அந்த இடத்தை விட்டு வெளியேறியதும் பழைய முருகேசு ஆகி விடுவாரா?

எல்லோருக்கும் இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால்தான் திருந்துவார்கள் என்றால் அது சாத்தியமில்லாததும் தேவையில்லாததுமாகும். ஏனென்றால் இப்படியான சந்தர்ப்பங்கள் அதிகமாக சினிமாவிலும் கதையிலும் தான் வர முடியும்.

முருகேசு கண் விழிக்க ஆரம்பித்தார்.



படிப்பகம்

www.padippakam.com

முள் வளர்ந்த சமுதாய
மணல் வரம்புகள்
ஓயாத
கால அலைகளினால்
கரைக்கப் படுவது நியதி.

10

"வித்தியாசப்படும் வித்தியாசங்கள்"

"இதுதான் கதைக்குப் பெயரா?"

"ஏன், நல்லாயில்லையா?"

"நல்லாத்தான் இருக்கு என்டாலும்....."

ரவி கொஞ்சம் இழுத்தான்.

ரவியும், சுகுமாரும் வாசிகசாலையின் முன்னாலிருந்த மதிலில் சாய்ந்தபடி நின்றனர். துவிச்சக்கர வண்டியும் ஒரு ஓரமாக களைத்துப் போய் சரிந்திருந்தது.

கொஞ்சம் முன்புதான் சுகுமார் தான் எழுதிய கதையைச் சொல்லியிருந்தான்.

வாசிகசாலையில் பலர் ஆர்வமாக புதினம் அறிந்து கொண்டிருந்தனர்.

தெருவிலும் போதியளவு ஆட்கள் இருந்தார்கள். உழவியந்திரமொன்று ரீங்காரித்துச் சென்றது.

"என்னடா இழுக்கிறாய்? விழுங்காமற் சொல்லன்"

"கதை நல்லாத்தான் இருக்கு. ஆனா சனம் இதை விரும்பி வாசிக்குமா?"

"அப்ப சனம் எதை விரும்பி வாசிக்கும்?"

"கதையை"

"நான் எழுதினது பாட்டா?"

"நீ கதைதான் எழுதியிருக்கிறாய். ஆனா இதைப் படிக்கிற சனபேருக்கு இது கட்டுரை மாதிரித்தான் தெரியும். ஏனென்டா, கதையென்டா அதில குறிப்பிட்ட சில விசயங்களை பல வாசகர்கள் எதிர்பார்ப்பினம்"



படிப்பகம்

www.padippakam.com

"எந்த விசயங்களை?"

"பெண் ஒன்றை அழகாக வர்ணிச்சே ஆக வேண்டும். கால் செருப்பிலிருந்து பின்னல் வரை. கொஞ்சம் 'தாராளமாக' விபரித்தால் வரவேற்க தக்கது."

"வேற?"

"முக்கிய கருப்பொருளாக காதல்தான் இடம் பெற வேண்டும். இரண்டு பேரை 'தெய்வீக' காதலால் இணைத்து, 'நெருங்க' வைத்து, காதலைப்பற்றி 'புனிதமாக' விபரித்து எழுத வேணும்."

"வேற?"

"காதலர்களுக்கிடையில் ஏதாவது பிரச்சனையைக் கிளப்பி, எல்லோரையும் குழப்பி, கடைசியா ஒராளை, இல்லாட்டி இரண்டு பேரையும் சாகடிச்சு, சோகமாக கதையை முடிச்சு, சமுதாயத்துக்கு ஒரு படிப்பினையைக் கொடுக்கலாம்"

"இப்பிடி எழுதினாத்தான் கதையா?"

"அப்பிடி நான் சொல்லேல. எங்கட ஆட்கள் இப்பிடியான கதையளைத்தான் விரும்பியினம். எழுதுயினம். அதாலதான் டானியல், செங்கையாழியான் கதையளை விட பிடி. சாமி, புஸ்பாதங்கதுரையின்ரை கதையள் நல்லா விற்பனையாகுது. எங்கட நாட்டிலேயே."

"நீ சொல்லுறதும் உண்மைதான். நீ சொல்லுற மாதிரி கதை வாசிக்கத்தான் கனபேர் இருக்கினம். அவையளுக்காக நான் கதை எழுதேல. என்னுடைய எழுத்தை விரும்புறது கொஞ்சப் பேராக இருந்தாலே போதும். அவையளாலதான் படிச்சதைப் புரிந்து கொள்ள முடியும். நீ சொன்ன மாதிரி ஆட்களுக்கு வாசிக்க மட்டும்தான் தெரியும். மிச்சம் பூச்சியம் தான். இதில என்ன பிரயோசனம்?"

ரவி பதில் சொல்லவில்லை. சுகுமாரின் வாயைக் கிளறினால் இப்படி ஏதாவது வரும் என்று தெரிந்து தான் பேச்சுக் கொடுத்தான்.

"கதையை என்னத்துக்கு அனுப்பப்போறாய்?"

"பேப்பருக்கு"

"போடுவாங்களா?"

"ஒரு நம்பிக்கைதான்."



படிப்பகம்

www.padippakam.com

பொழுது தன்னுடைய போக்கில் போய்க் கொண்டிருந்தது.

கடைகளுக்கு முன்னால் சாமான் வாங்குபவர்களை விட அரட்டையடித்தக் கொண்டு பல பேர் நின்றார்கள்.

இரண்டு துவிச்சக்கர வண்டிகளில் இரண்டு பேர் ஒருவர் கையை ஒருவர் பிடித்தவாறு பறந்து போனார்கள்.

"முந்த நாள் ரவுணுக்க செல் விழுந்தது தெரியுமே?"

"தெரியும்"

"அப்பா தப்பினது அருந்தப்பு. அவர் அந்த நேரம் வேற வாட்டில இருந்தவராம்"

"உன்ரை அப்பாவும் ஓடியாடி வேலை செய்து கொண்டு நிண்டார்"

ரவி ஒரு கணம் சுகுமாரைப் பார்த்தான்.

"அப்ப, அந்த நேரம் நீ அங்கயே நிண்டனி?" ரவி ஆச்சரியத்தோடு கேட்டான்.

"அழைப்பு வந்தது. போயிட்டேன்."

ரவிக்கு விளங்கவில்லை.

"ரவி இப்ப உன்னோடை ஒரு முக்கியமான விசயம் கதைக்கப் போறன். இதுவரை யாருக்கும் தெரியாத விசயம் இது."

ரவி சுவாரசியமாக சுகுமாரைப் பார்த்தான்.

சுகுமார் சுற்றிலும் பார்த்தான். அருகாக யாரும் இல்லை என்று உறுதிப் படுத்திக் கொண்டு ரவியை நெருங்கினான்.

மின்மினி ஒன்று அட்களை உதிர்த்து விட்டுப் போனது.

சுகுமார் நீண்ட நேரமாக கதைத்துக் கொண்டேயிருந்தான். அவனுடைய கண்கள் கலங்கி கண்ணீர் துளி விழ யோசித்தது.



படிப்பகம்

www.padippakam.com

மாற்றப்பட வேண்டிய
மன்னிக்க முடியாத
தீர்ப்பு
வரட்சியற்ற புரட்சி மண்ணில்
தோன்ற வேண்டும்
11 புதிய வார்ப்பு.

"சுகுமாரைக் காணவில்லை"

கடையில், தெருவில், வாசிகசாலையில், தவறணையில்......

ஊர் முழுவதும் கதைத்தது. தேடியது.

"சுகுமாரைக் காணவில்லை."

இது மட்டும்தான் எல்லோருக்கும் தெரிந்தது. மேலதிக விபரம் எதுவும் ரவியைத் தவிர எவருக்கும் தெரியவில்லை.

தேவகி பெரிதாக அழுது கொண்டிருந்தாள். என்னதான் சுகுமாரைத் திட்டினாலும் அவன் மீது அவள் மிகுதியான பாசம் வைத்திருந்தாள். அதுதான் தாய்மை. குருதிப் பரிமாற்றம் செய்து கொண்ட உறவல்லவா?.

வாணி கூடக் கலங்கிப் போயிருந்தாள். அநேகம் பேருக்கு எதாவதொன்றை இழந்த பின் தான் அதன் அருமை தெரிகிறது. உயிருடன் இருக்கையில் மதியாமல் இறந்தபின் சிலை கட்டி மாலை துடுவது போல்.

ராமலிங்கம் வெளிக்கு உணர்ச்சியைக் காட்டாவிட்டாலும் துக்கமாயிருந்தார். அவரிடம்தான் சுகுமாரின் கடிதம் கிடைத்திருந்தது.

'என்னை யாரும் தேடவேண்டாம். தேவையில்லாமல் நான் உங்களை விட்டுப் பிரியவில்லை. கடமைகளிலிருந்து தப்பித்து விட்டதாகவும் நினைக்க வேண்டாம். அதிஸ்டம் இருந்தால் மீண்டும் சந்திப்போம்.'

சுகுமார் எங்கே போயிருக்கலாம் என்று பலபேர் பலவாறு ஊகித்தனர். அநேகருடைய ஊகம் கிட்டத் தட்ட ஒரே மாதிரியாக இருந்தது.

ரவி வீட்டிற்குள்ளேயே இருந்தான்.

அன்று முழுவதும் வீட்டிலேயே அவன் அடைந்திருந்தான். வெளியே போகவே அவன் விரும்பவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

ரவி சுகுமாரின் நினைவாகவே இருந்தான். சுகுமாரின் பிரிவை அவனால் சுலபமாக ஜீரணிக்கக் கொள்ள முடியவில்லை.

கடைசி இரவு அவன் கதைத்தது நெஞ்சை விட்டு அகலவேயில்லை.

"ரவி, முதலிலே நீ முன்பு கேட்ட சந்தேகங்களைத் தீர்த்து விடுகிறேன். என்னுடைய புத்தக அலுமாரிக்குள் ஏப்பாக்கி எப்படி வந்தது என்று கேட்டாய். நான் ஒரு விடுதலை அமைப்புடன் இணைந்திருப்பதால் அது என்னிடம் இருந்தது. ஒரு இரவு உன்னுடைய அப்பா என்னை பாதையில் கண்டதாகச் சொன்னாய். அமைப்பு வேலைகளுக்காக தோழர் ஒருவரின் வீட்டிற்குச் சென்றிருந்தேன். இதையெல்லாம் ஏன் உன்னிடம் தெரிவிக்கவில்லை என்று உனக்கு கோபமாயிருக்கலாம். ரகசிய வேலைகளை பகிரங்கமாக்கக் கூடாது என்பது எங்களுக்கிடப்பட்ட கட்டளைகளில் ஒன்று. என்னால் உனக்கும் பாதிப்புகள் ஏற்படக் கூடாது என்பது இரண்டாவது காரணம். என்னோடு இன்னும் பல இளைஞர்கள் ஆர்வத்துடனும், இலட்சியத்துடனும் அமைப்பில் இணைந்து கொண்டார்கள். ஆனால் போகப் போக நாங்கள் போகும் பாதை வேறு எங்கோ எங்களை கூட்டிப் போவதாக உணர்ந்தோம். அதைக் கதைத்தோம். அதன் எதிரொலிப்பு 'மேலே' போய் வருகையில் என்னவாயிருக்கும் என்பதை முன் கூட்டியே எம்மால் அறிய முடிந்தது. அதனால் அவர்களின் பாவத்தை மேலும் அதிகரிக்காமல் தூரப் போய்விட முடிவு செய்து விட்டோம். என்னுடைய கவலை என்னுடைய உயிரைப்பற்றி அல்ல. என்னைப் போல் எத்தினை பேருடைய இலட்சியங்கள் அநியாயமாக அழிந்து விடுகிறதே என்றுதான் வருந்துகிறேன். திரும்பவும் சந்திப்போம் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. எனக்கிருந்த வீட்டுக் கடமைகளில் நீயும் பங்கெடுத்துக் கொள்வாய் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது."

சுகுமாரை ரவி இழந்து விட்டான். நிரந்தரமாகவா? தற்காலிகமாகவா? என்பது தெரியவில்லை. நினைத்தும் பார்க்க முடியாத சம்பவங்கள்தானே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

வெளியே இருள் சூழ்ந்து கொண்டிருந்தது.

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE , FRANCE

---

கதையில் இடம் பெற்ற பெயர்கள் யாவும் கற்பனையே.



படிப்பகம்

www.padippakam.com

# SÜDASIEN BÜRO e.V.

# தென் ஆசிய நிறுவனம்




## மேற்கு ஜேர்மனி

Kiefernstr. 45
5600 Wuppertal 2
Tel. (0202) 50 71 56

எமது தென்னாசிய நிறுவனத்திலுல் தமிழிலும் செய்திக் குறிப்புக்கள் மாதமிருமுறை வெளியிடப் படுகின்றன. இவை முக்கியமான செய்திகளின் தொகுப்புக்களையும், தற்கால இலங்கை அரசியல் நிலைகள் பற்றிய கட்டுரைகளையும் உள்ளடக்கியுள்ளன. இவற்றைப் பெற விரும்புவோர் மேற்படி முகவரிக்கு உங்கள் விபரங்களைக் கட்டணத்துடன், கீழ்வரும் படிவத்தில் தருமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

கட்டண விபரம் :.

6 மாதங்களுக்கு 18,- மட்டும்.
12 மாதங்களுக்கு 35,- மட்டும்.

குறிப்பு :

ஆகக் குறைந்த தொகையாக ஆறு மாதங்களுக்கான தொகையே ஏற்கக் கொள்ளப் படுகின்றது

இந் நிறுவனம் Südasien-Info எனும் வெளியீட்டினை ஜேர்மன் மொழியில் வருடாந்தம் எட்டுத் தடவைகளும், Kurz-Info (ஆங்கில ஜேர்மன் மொழிப் பத்திரிகைகளில் பிரசுரமான இலங்கை மற்றும் தமிழர் சம்பந்தமான செய்திகளின் பிரதித் தொகுப்பு.) எனும் வெளியீட்டினை மாதமிருமுறைகளும் அங்கத்தவர்களுக்கு வெளியிடுகின்றது.

இந் நிறுவன வெளியீடுகள் இலங்கைத் தமிழரது பிரச்சனைகளை உலகிற்கு வெளிக் கொணருவதில் முக்கிய பங்கை ஆற்றுகின்றது. உதாரணமாக இவை ஜேர்மனியில் உள்ள நிர்வாக நீதிமன்றங்களிலுல் பல சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தீர்ப்புகளுக்கான சான்றுகளாய் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை.

இந்நிறுவனத்தில் அங்கத்தவராகச் சேர விரும்புவோர், கீழ் வரும் படிவத்தை ஆங்கிலத்தில் தெளிவாக நிரப்பி அனுப்பும் வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

அங்கத்தவ நிதி விபரம்.: மாணவர்கள், அகதிகள் மாதாந்தம் 05,- மட்டும்.

வங்கி விபரம் : Stadtsparkasse Wuppertal BLZ 330 500 00
Kto - Nr.: 26 85 40

படிப்பகம்

www.padippakam.com

அடுத்த வெளியீடு.....



மனிதன் சூழலைப் பாதிக்கையில்
சூழல் மனிதனை பாதிக்காதா?




# SÜDASIEN BÜRO

~~KIEFERN STR. 45~~
~~5600 WUPPERTAL - 2~~
~~Tel. 0202/507156~~

Süd-Asien-Büro
Große Heimstraße 58
4600 Dortmund 1

படிப்பகம்